# சமூக மனவெழுச்சிப் பிரவேசத் திறன்கள்.



கல்வி அமைச்சு

# முன்னுரை

பாடசாலைக்கு அவசியப்படுகின்ற மிகவும் பொருத்தமான தீர்வை மேற்கொள்ளும் அதிகாரத்தை பாடசாலைகளில் வலுவூட்டுவதற்காகவும் மற்றும் பாடசாலைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை பன்முகப்படுத்துவதற்கும் பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம் (EPSI) தற்போது நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் செயற்பட்டு வருகின்றது. அதாவது பாடசாலையை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக, பாடசாலையுடன் தொடர்புடைய அனைத்து ஆளணியினரினதும் அதிகபட்ச பங்களிப்பைப் பெற்று, பாடசாலை தொடர்பான பிரச்சினைகளுக்குப் பாடசாலையினாலேயே தீர்வைப் பெற்று சிக்கல்களை நிவர்த்தி செய்தல் இங்கு நடைபெறுகிறது.

தற்போது பாடசாலையினுள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பாடவிதானத்தில், மாணவர்களுக்கு அறிவை வழங்குவது மட்டுமல்லாமல், அவர்களின் மனப்பாங்கு மற்றும் திறன்களை மேலும் விருத்தி செய்து தேர்ச்சிமிக்க குடிமக்களை இந்நாட்டுக்கு அர்ப்பணிப்பு செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும் தற்போதய போட்டித் தன்மைமிக்க கல்வி முறைமையினால், மாணவர்கள் அதிக கவனம் செலுத்துவது தங்கள் அறிவை மென்மேலும் விருத்தி செய்து பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைந்து கொள்வதேயாகும்.

பாடசாலையினுள், வகுப்பறையில், மற்றும் வகுப்பறைக்கு வெளியே சுற்றுச்சூழலில் மாணவன் பெற்றுக் கொள்ளும் பல்வேறுபட்ட அனுபவங்கள் அவர்களின் சமூக மனவெழுச்சித் திறன்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. அதற்காக கல்விப்புலத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும், சமூக மனவெழுச்சித் திறன்கள் தொடர்பான அறிவையும் மற்றும் தெளிவையும் வழங்கி அதன் பிரகாரம் செயற்படுவது மிகவும் முக்கியமாகும்.

பாடசாலையிலிருந்து சமூகத்திற்குப் பிரவேசிக்கும் நபர்கள் அறிவைப் போலவே சிறந்த விழுமியக் குணப்பண்புகளைக் கொண்ட சமநிலை ஆளுமை மிக்கவர்களாக சமுகத்திற்கு அர்ப்பணிப்பு செய்யப்படுவது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமாகக் கருதப்படுகின்றது. எனவே பாடசாலையினுள் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளை சிறப்பாக மேற்கொண்டு செல்வதற்கு வழிகாட்டுபவரான ஆசிரியரினால், மாணவச் சிறார்களுக்குச் சிறந்த சமுகத் திறனை வழங்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு “சமூக மனவெழுச்சிப் பிரவேசத் திறன்கள்” என்று பெயரிடப்பட்ட இந்தக் கையேடு தொகுக்கப்பட்டுள்ளது.

இந்த கையேட்டின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் உள்ள சமூக மனவெழுச்சித் திறன்கள் தொடர்பான கற்றல்களும் அதுபோலவே உளவியல் சமுகத் திறனை விருத்தி செய்யும் போது ஆசிரியர் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் ஆசிரியரினால் செயற்படுத்தப்பட வேண்டிய துறைகள் தொடர்பாக மிகத் தெளிவாகவும் விபரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கையேட்டினை பயன்படுத்துவதன் மூலம் கல்வித் துறையில் முன்னோடியாக இருக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் கல்வித்துறையில் பல்வேறு திட்டமிடல்களை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கும் மேலும் கல்வியியலாளர்களுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் அவர்களின் சமூக மற்றும் மனவெழுச்சித் திறன்கள் பற்றிய அறிவை விருத்தி செய்வதற்கும் பாடசாலை மாணவ, மாணவிகளின் மனவெழுச்சி சார் நடத்தைக் கோலங்களை மேம்படுத்துவதற்கும் முடியுமாக இருக்கும் என எதிர்பார்க்கிறேன்.

சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்தல் தொடர்பான நடவடிக்கைகள் பொதுக் கல்வி மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தின் (GEM) குறுகிய காலத்தினுள் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கக்கூடிய சுட்டிகளுள்

(DLI) முதன்மையான சுட்டியாகக் கருதப்படுகின்றது. இது தொடர்பாக, ஆசிரியர்களினால் வகுப்பறைகளில் கணிப்பீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதோடு இரண்டாம் தரப்பினராக கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்விப் பணிமனைகள் ஆகியவற்றின் மூலம் பாடசாலையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுள் (Process) கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது சமூக மனவெழுச்சித் திறன்களுக்குப் பொருத்தமான பல்வேறு செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு, அதற்கேற்ப மாணவர்களை பிரயோக ரீதியிலான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது மிகவும் அவசியமாகின்றது. எனவே எதிர்காலத்தில் கற்றல் கற்பித்தல் செயல்முறைக்கு மிகவும் பயனுறுதியாக அமையும் விதத்தில் பங்களிப்புச் செய்யக்கூடிய விடயங்கள் தொடர்பான செயற்பாடுகள் உள்ளடங்கிய ஒரு செயற்பாட்டுப் புத்தகம் கல்வி அமைச்சின் பாடசாலை அலுவல்கள் பிரிவினரால் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பீ.டபிள்யூ. அமரதிவாகர
கல்விப் பணிப்பாளர்.
பாடசாலை அலுவல்கள் கிளை
கல்வி அமைச்சு.
2022.03.

**கண்காணிப்பும் மற்றும் மேற்பார்வையும்**

எல். எம். டி. தர்மசேன — மேலதிக செயலாளர்
(பாடசாலை அலுவல்கள்)
கல்வி அமைச்சு

**கையாள்கை**

என்.டப். ஈ.ஜே.எம்.டீ பிராணாந்து
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
கல்வி அமைச்சு

ஜி.டி.எச்.கோசலா — பிரதிக் கல்விப் பணிப்பாளர்
கல்வி அமைச்சு

**ஆலோசனை**

பேராசிரியர் பி.எம்.எஸ். பண்டார
சமூகவியல் மற்றும்
மானிடவியல் கலைப்பீடம்
ரஜரட்ட பல்கலைக்கழகம்

பி.டபிள்யூ. அமரதிவாகர — கல்விப் பணிப்பாளர்
கல்வி அமைச்சு

**எழுத்தாளர் குழு**

பேராசிரியர் பி.எம்.எஸ். பண்டார
சமூகவியல் மற்றும்
மானிடவியல் கலைப்பீடம்
ரஜரட்ட பல்கலைக்கழகம்

பேராசிரியர் எஸ்.பீ.டபிள்யூ. வாகிஸ்த
வலயக் கல்விப் பணிமனை
காலி

| | |
|---|---|
| பி.டபிள்யூ. அமரதிவாகர | கல்விப் பணிப்பாளர்<br>கல்வி அமைச்சு |
| எல்.ஆர்.எஸ். ஜயவர்தன | கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)<br>மேல் மாகாண கல்வித்<br>திணைக்களம். |
| டபிள்யூ.கே.எச்.டி சில்வா | வலயக் கல்விப் பணிப்பாளர்.<br>வலயக் கல்விப் பணிமனை-<br>காலி |
| ஏ.டீ.பாலபடபெந்திகே | கல்விப் பணிப்பாளர்.<br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி,<br>முன் பள்ளிகள் மற்றும் ஆரம்பக் கல்வி,<br>பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும்<br>கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சு |
| பி.கே.எஸ்.எஸ் திலகரத்ன | விரிவுரையாளர்<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| ஆர்.ஏ.பி.யு.ஐ. பெரேரா | விரிவுரையாளர்<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| எஸ்.லலிதாம்பிகை | பிரதிக்கல்விப் பணிப்பாளர்<br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி,<br>முன் பள்ளிகள் மற்றும் ஆரம்பக் கல்வி,<br>பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும்<br>கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சு |
| என்.டப். ஈ.ஜே.எம்.டீ பிராணாந்து | பிரதிக் கல்விப் பணிப்பாளர்<br>கல்வி அமைச்சு |

| | |
|---|---|
| ஜி.டி.எச்.கோசலா | பிரதிக் கல்விப் பணிப்பாளர்<br>கல்வி அமைச்சு |
| கே.டீ.எச்.பீ சிறிவர்தன | உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>கல்வி அமைச்சு |

**ஓவியங்கள்**

| | |
|---|---|
| அமிதா இந்திராணி | உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>வலயக் கல்விப் பணிமனை<br>களனி |

**கணினி தட்டச்சு மற்றும் எழுத்துருக்கள் (சிங்களம்)**

| | |
|---|---|
| டபிள்யூ. இசுரி மதுஷானி | கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

# உள்ளடக்கம்


1. அறிமுகம் ....................................................................1

2. சமூக மனவெழுச்சித் திறன்கள் .........................................5

3. கல்விப்புலத்திற்கு சமூக மனவெழுச்சித் திறன்களின் அவசியம்.........................................................................8

4. சமூக மனவெழுச்சித் திறன்களின் இயல்பைக் கண்டறிதல்..........................................................................12

5. சமூக மனவெழுச்சித் திறன்களைக் கற்றல்..........................25

6. பாடசாலையினுள் சமூக மனவெழுச்சித் திறன்களைச் செயற்படுத்துதல்................................................30

7. சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் சார்ந்த எடுத்துக் காட்டுகள்...............................................................39

8. சமூக மனவெழுச்சித் திறன்களை செயற்படுத்தும் போது எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இடர்கள்........................................................................49

9. சமூக மனவெழுச்சித் திறன்கள் தொடர்பான கணிப்பீடுகள்.....................................................................57

# 01

# அறிமுகம்

# Introduction



இலங்கை தற்போது கல்வியில் 90% க்கும் அதிகமான எழுத்தறிவு விகிதத்துடன் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக விளங்குகின்றது. அதே சமயம் கல்வியில் உயர் மட்ட சாதனைகளைப் படைத்து அனைத்து துறைகளிலும் சிறந்த பெறுமானத்தை வெளிக்காட்டும் நிலைமையையும் எமக்குக் காணக்கூடியதாக இருக்கின்றது. உலகெங்கிலும் பரந்து காணப்படுகின்ற இலங்கையைச் சேர்ந்த அறிஞர்கள் பல்வேறு சேவைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இன்றைய சமூகத்தைப் பார்க்கும் போது கல்வியுடன் கூடிய மனிதப் பண்புகளின் வளர்ச்சி குறைந்த அளவில் இருப்பதாகவே தெரிகிறது. இத்தகையை நிலைமை சமநிலையான ஆளுமை கொண்ட பிரசையை தோற்றுவிக்கும் நோக்கங்களை அடைவதில் மிகவும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு பல்வேறு காரணங்கள் காணப்பட்டாலும் கல்வியே அதற்கு வலுவான காரணியாக நோக்கப்படுகின்றது.

பல நூற்றாண்டு காலமாக செயற்படுத்தப்பட்டு வருகின்ற கல்விச் செயற்பாட்டில் ஆளுமை பற்றிய எண்ணக்கருக்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வந்த போதிலும், தற்காலத்தில் முன் ஏப்போதும் இல்லாத வகையில் அது தொடர்பாக தீவிரமாக கவனஞ் செலுத்த வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இது அடிப்படைக் கற்றல் கொள்கைகள் மற்றும் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள், நுட்பங்களைப் பயன்படுத்துதல், தூண்டுதல்கள் மற்றும் ஆசிரியர்களின் வகிபாவங்கள் மாற்றமடைதல், கற்றலுக்கான சமவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் இவ்வாறான பல துறைகளின் ஊடாக குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சி தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

கல்விச் செயற்பாட்டின் அடிப்படையில் அதில் கற்றல், நினைவாற்றல், நுண்ணறிவு, ஊக்கமளித்தல், அறிவாற்றல், கற்றல் மாற்றம், கருத்தாக்கம் மற்றும் ஆளுமை போன்ற பல செயல்முறைகள் உள்ளடங்கியுள்ளன. இத்தகைய

செயல்முறைகளை அடைந்து கொள்வதன் மூலமும், தரமான கற்றல்-கற்பித்தலை நடைமுறைப்படுத்திப் பேணுவதன் காரணமாகவும் சமநிலையான ஆளுமையையும் மற்றும் தேர்ச்சிகளையும் கொண்ட பிள்ளைகளை சமூகமயமாக்க எதிர்பார்க்கப்படுகிறது.

நவீன தொழில்நுட்பம், தொழில்மயமாதல், என்பவற்றுடன் இன்றைய சமுதாயம் மிக வேகமாக முன்னேறிச் செல்வதைக் கண்டு கொள்ள முடிந்த போதிலும், அதனுடன் ஒப்பீடு செய்யும் போது மனிதப் பண்புகளின் வளர்ச்சி பல்வேறு காரணிகளால் பின்தங்கியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதற்குரிய பிரதான காரணம் சமூக மற்றும் மனவெழுச்சித் திறன்களில் போதிய வளர்ச்சி ஏற்படாமையே ஆகும். எனவே சமூக மனவெழுச்சித் திறன்கள் எனும் எண்ணக்கரு மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இந்த அறிவுரைப்பு வழிகாட்டித் தொகுப்பின் பரந்த நோக்கங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

» கல்விப்புலத்தில் கடமையாற்றுகின்ற அனைத்து துறைசார் ஆளணியினருக்கும் சமூக மனவெழுச்சித் திறன்கள் பற்றிய அடிப்படை விழிப்புணர்வை வழங்குதல்.

» பாடசாலைக் கலைத் திட்டத்தின் மூலம் சமூக மனவெழுச்சித் திறன்கள் தொடர்பான கற்றலை எவ்வாறு மேற்கொண்டு செல்லலாம் என்பது தொடர்பான அறிமுகத்தை வழங்குதல்.

» சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்யும் பிரகாரம் கற்றல் கற்பித்தல் செயல்முறையை எவ்வாறு மேற்கொண்டு செல்லலாம் என்பதை ஆசிரியர்களுக்கு அறிவூட்டம் செய்தல்.

» சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்தல் தொடர்பான ஒரு செயன்முறையை வகுப்பறையில் திட்டமிட்டு நடாத்திச் செல்ல வேண்டியதன் அவசியத்தை தெளிவுபடுத்துதல்.

» குடும்பம், சூழல் மற்றும் சமூகத்தில் இவ்வாறான சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்தல் செயல்முறை நடைமுறையில் இருப்பதை உறுதி செய்தல்.

» சமூக மனவெழுச்சித் திறன்களை கற்றறிதல் தொடர்பான செயல்முறையைக் கணிப்பீடு செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்.

# 02

# சமூக மனவெழுச்சித் திறன்கள்

# Socio Emotional Skills



சமூக மனவெழுச்சித் திறன்கள் எனும் போது கருதக்கூடியது யாதெனில் ஒருவரின் தனியாள் உணர்வுகளை இனங்கண்டறிந்து அதனை சிறப்பான முறையில் முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதும் அது போலவே பிறரின் உணர்வுத்திறன்களை இனங்கண்டறியும் ஆற்றல் என்பதைக் குறிக்கும்.

சமூக மனவெழுச்சித் திறன்கள் வளர்ச்சியின் போது ஒரு நபருக்குத் தனது உணர்வுகள் மற்றும் நடத்தைகளை இனங்கண்டு கொள்ளவும் அதனை சிறப்பான முறையில் நிர்வகிக்கவும் தேவையான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு தொடர்பான விளக்கத்தை வழங்குவதும் நடைபெறுகின்றது.

சமூக மனவெழுச்சித் திறன்களை வரைவிலக்கணம் செய்யும் போது" எமது எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நடத்தைகளை ஒழுங்குபடுத்தும் ஆற்றல்களின் கூட்டமைப்பு" என வரையறுக்கலாம். (OECD.org, p.4)

சமூக மனவெழுச்சித் திறன்கள் என்பது "ஆளுமைப் பண்புகள், உந்துதல்கள் மற்றும் பெறுமானங்கள் போன்ற உளவியல் எண்ணக்கருக்களை விவரித்துக் கூறப் பயன்படுத்தப்படும் பொதுவான ஒரு கருத்தாகும். (Danner, 2021, p.4)

க்ரீன்பெர்க் உட்பட ஏனைய அறிஞர்களின் கருத்துப்படி (பக். 2003, 276-277) சமூக மனவெழுச்சித் திறன்களில் கவனம் செலுத்தும் போது பின்வரும் ஐந்து துறைகளில் கலந்துரையாடலாம் என்கிறார்கள்.

1) சுய விழிப்புணர்வு (Self - Awareness)

2) சுய முகாமைத்துவம் (Self - Management)

3) சமூக விழிப்புணர்வு (Social Awareness)

4) ஆளிடைத் தொடர்பு

(Relationship Skills / Interpersonal Relationship)

5) பொறுப்பு வாய்ந்த முடிவெடுத்தல்


(Responsible Decision Making)

சமூக மனவெழுச்சித் திறன்கள் என்பது ஒரு பிள்ளை சிறந்த சமூக உறவுகளை கட்டியெழுப்புவதற்காக விருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்களின் ஒன்றிணைப்பாகும். இந்த திறன்களை சிறுவயதிலிருந்தே படிப்படியாக வளர்த்துக் கொள்ள முடியும் என்பதுடன் மேலும் அவற்றின் விருத்தி தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் நல்ல அடித்தாளத்தை வழங்குவதாகவும் அமையும்.

# 03

# கல்விப்புலத்திற்கு சமூக மனவெழுச்சித் திறன்களின் அவசியம்

# The need for socio emotional skills for the education system



சிறந்தவொரு சமுதாயத்தை உருவாக்குவதில் மிக முக்கிய பங்களிப்பை வழங்க முடிவது கல்வித்துறையின் ஊடாகவாகும். மாணவப் பரம்பரையை மிகவும் பயனுள்ள முறையில் இலங்கையர் என்ற அடையாளத்துடன் கூடிய சர்வதேச பிரஜையாக மாற்றியமைப்பதற்கு கல்விப் புலத்தினால் ஆற்றக்கூடிய பங்களிப்புக்கள் அளவற்றவை. எனவே, கல்விப்புலத்திற்காக சமூக மனவெழுச்சித் திறன்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டியது காலத்தின் மிக அவசியத் தேவையாக உள்ளது.

தற்போதைய கல்விக்கோலத்திற்கு ஏற்ப கல்விச் செயற்பாடுகளுக்கும் மிகவும் போட்டித் தன்மை மிகுந்தவொரு சூழல் உருவாக்கியுள்ளது. சகல கற்றல் கற்பித்தல் செயல்முறையும் பரீட்சையை அடிப்படை நோக்கமாகக் கொண்ட கற்பித்தல் முறைமைக்கு திசைமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அது போலவே உயர்கல்வியைத் தொடர்வதற்கான சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் வரையறுக்கப்பட்டுள்ள காரணத்தினால் போட்டியிட்டு பல்கலைக் கழகத்தினுள் நுழைதல் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டு காணப்படுதல் ஆகியன காரணமாக கல்விப்புலம் மிகவும் சிக்கலான மற்றும் போட்டித்தன்மை மிக்கதாக மாறியுள்ளது.

பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை காரணமாக கல்வியின் இறுதி இலக்கான “நற்பிரசைகளை உருவாக்குவது “எனும் நோக்கத்தை அடைய இன்று பிரச்சினை மிகுந்த நெருக்கடியான ஒரு சூழல் தோற்றம் பெற்றுள்ளது. தற்போதைய மாணவர் சமூகத்தினரிடம் அதிதீவிர சுயநலம், பிறர் மீதான பச்சாதாபமின்மை, சமூக விரோத நடத்தைக் கோலம், மனித நேயமின்மை, பிறர் கண்ணியத்திற்கு அவமரியாதை செய்தல், உளநலக் கோளாறுகள், ஒத்துழைப்பின்மை மற்றும் மோசமான சமூக நடத்தைக் கோலங்கள் போன்ற ஏற்றுக் கொள்ள முடியாத விடயங்கள் காணப்படுகின்றன என்பதை பல ஆய்வுகள் மூலம் அறிய முடிகின்றது.

கல்வி தொடர்பான உலகளாவிய பிரகடனம், மற்றும் இலங்கையின் கல்விக் கொள்கையை உருவாக்குவது தொடர்பான பல ஆவணங்கள் என்பன கல்விச் செயற்பாட்டில் சமூக மன வெழுச்சித் திறன்களின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

எட்கா போரே என்பவரின் தலைமையில் UNESCO நிறுவனத்தின் மூலம் 1972 அண்டு வெளியிடப்பட்ட "வாழ்க்கைக்கான கல்வி" என்ற அறிக்கையில், வாழ்க்கைக்கான கல்வி கற்றலில் எட்டு அடிப்படை அம்சங்களையும் மற்றும் 21 பரிந்துரைகளையும் கோடிட்டுக் காட்டியது. இந்தப் பரிந்துரைகளில் சமூக மனவெழுச்சித் திறன்கள் விருத்தியடையும் விதத்தில் கல்வி முறைமையை எவ்வாறு வடிவமைப்பது என்பது பற்றிய தெளிவான விளக்கங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

1996 ஆம் அண்டு ஜெக் டெலாஸ் (Jacques Delors) தலைமையிலான டெலாஸ் ஆணைக்குழுவின் அறிக்கை ஆறு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதோடு அந்த ஆணைக்குழு அறிக்கையிலும் சமூக மனவெழுச்சித் திறன்களின் அவசியம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(Jacques Delors) இன் அறிக்கையின்படி, 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை சமாளிக்க நான்கு முக்கிய தூண்களில் கல்வி கட்டமைக்கப்பட வேண்டும். எனக்கூறப்பட்டுள்ளது.

கல்வியானது :- கற்றலுக்காக கற்றல், வேலை செய்யக் கற்றல், வாழ்வதற்காகக் கற்றல் மற்றும் ஒன்றாக சேர்ந்து வாழக் கற்றல் போன்ற நான்கு மிக முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டது என இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. அதன்படி, ஒன்றாகச் சேர்ந்து வாழக் கற்றுக்கொள்வதற்கு சமூக மனவெழுச்சித் திறன்களின் விருத்தி மிகவும் முக்கியமானது.

1992, 2003 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கைகள் அனைத்தும் கல்விச் செயற்பாடுகளில் சமூக மனவெழுச்சித் திறன்களின் விருத்தியின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும், குறிப்பிட்டுள்ளதோடு மேலும் அத்தகைய சமூக - மளவெழுச்சித்

திறன்கள் கல்வி அமைப்பில் எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்பதற்கான பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளது.

2000 - 2015 உலக அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் 08 விதமான மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகள் (MDG) என்பதன் கீழ் ‘அனைவருக்கும் ஆரம்பக் கல்வி’ என்ற அணுகுமுறையின் ஊடாக சமூக மனவெழுச்சித் திறன்களின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2015 - 2030 வரை செயற்படுத்தப்பட்டு வருகின்ற நிலைபேறான வளர்ச்சி நோக்குகள் 17 இன் கீழ், நான்காவது நோக்கமாக காணப்படுவது “நியாயமான தரமான கல்வியை உறுதி செய்வது” என்பதாகும். இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளிலும் கூட சமூக மனவெழுச்சித் திறன்களுடன் கூடிய கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி அமைச்சினால் 2018 - 2025 ஆண்டுக்காக வெளியிடப்பட்ட “கல்வித் துறை அபிவிருத்தித் திட்டத்தில்”, முன்னுரிமைத் துறை 02 நோக்கம் 05 இன் கீழ் கல்விப்புலத்தில் பண்புத்தரமான வளர்ச்சியின் கீழ் மாணவர்களின் சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்வது வலியுறுத்தப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ள வேண்டும் என உத்தேசிக்கப்பட்டு முன்மொழியப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்களில் எதிர்பார்க்கப்படுகின்ற பிரதான விடயம் யாதெனில் தேசிய அபிவிருத்திக்கு செயல் ரீதியான பங்களிப்பை வழங்கும் பிரசைகளை உருவாக்குதல், உற்பத்தி மற்றும் வினைத்திறன்மிக்க ஊழியர்களை உருவாக்குதல் மற்றும் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், நாட்டை நேசிக்கும் நற்பிரசைகளை உருவாக்குதல், ஒரு நல்ல மனிதனை உருவாக்குதல் மற்றும் மகிழ்ச்சியாக வாழும் குடும்பத்தை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த அடிப்படை இலக்குகளை அடைவதற்காக, சமூக மனவெழுச்சித் திறன்களை கல்வி முறையில் உட்படுத்திக் கொள்ளல் மற்றும் அவற்றை செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

# 04

# சமூக மனவெழுச்சித் திறன்களின் இயல்பைக் கண்டறிதல்

# Identifying the nature of socio emotional skills



பாடசாலையொன்றில் கல்வி கற்கும் சகல பிள்ளைகளினதும் மற்றும் அவர்களது பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் மிகப்பெரிய எதிர்பார்ப்பு "ஒரு பிள்ளையை நல்ல ஆளுமைகளுடன் சமூகமயப்படுத்தி உருவாக்கி விடுவதாகும்". அவர்களின் அத்தகைய கனவுகளை எவ்வாறாயினும் நனவாக்க வேண்டும் என்பதே பாடசாலையின் நோக்கமாகும். இந்நிலையில், பாடசாலையின் மூலம் பெறப்பட்ட கல்வி அறிவை மாத்திரம் பயன்படுத்தி தன்னை தயார்படுத்திப் பரீட்சையில் வெற்றிகரமாக சித்தியடைவதை இலக்காகக் கொண்ட கல்வி முறையாக அமைவது சமூகத்தை ஒரு திசைக்கு மாத்திரம் தள்ளிச் செல்லும் செயன்முறையாகும்.

எனவே, குழந்தையுள் சுய விழிப்புணர்வு, சுய முகாமைத்துவம், சமூகம் பற்றிய தெளிவைப் பெறுதல், ஆளிடைத் தொடர்பு மற்றும் பொறுப்பு வாய்ந்த தீர்மானம் மேற்கொள்வது போன்ற சமூக மனவெழுச்சித் திறன்களை வளர்ப்பது மிகவும் முக்கியமாகும். அத்தகையை திறன்களை மேலும் நோக்குவோம்.

## 4.1 சுயவிழிப்புணர்வு (Self - awareness)

ஒருவரின் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் நன்மதிப்புகள், பெறுமானங்கள் என்பவற்றை மிகவும் சரியான முறையில் இனங்கண்டறியும் ஆற்றல் மற்றும் அத்தகைய நடத்தையில் தாக்கம் செலுத்துகின்ற விதத்தை அறிந்து கொள்ளக்கூடிய தன்மை 'சுய விழிப்புணர்வு' எனப்படும்.

மேலும், உறுதியான நம்பிக்கை, உடன்பாடான உள்ளுணர்வுகள் மற்றும் விருத்தி அடையும் உள நிலைமைகள் (growth mindset) கொண்ட ஒருவரின் பலம் மற்றும் வரையறைகளை மிகவும் சிறந்த முறையில் கணிப்பீடு செய்யும் ஆற்றல் சுய விழிப்புணர்வு எனக்கூறப்படும்.

(Laburova) லாபுரோவாவின் (2020) கருத்துப்படி, சுய விழிப்புணர்வு என்ற எண்ணக்கரு பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

1) உணர்வுகளை இனங்கண்டறிதல்
Identifying emotions
2) சுய - உணர்வு பெறுதல
Accurate self-perception
3) பலங்களை இனங்கண்டறிதல்
Recognizing strengths
4) தன்னம்பிக்கை
Self-confidence
5) சுய - செயற்திறன்
Self-efficacy

(Laburova, 2020)

மகிழ்ச்சி, பயம், கோபம், பொறாமை, குரோதம், வெறுப்பு, சோகம், போன்ற உணர்வுகள் தன்னிடத்தில் உள்ளனவா என்பதைச் சரியாக இனங்கண்டறிய சிறுவயதிலிருந்தே பயிற்சியளித்து பழக்கப்படுத்துவது மற்றும் சன்மார்க்க அறநெறி செயற்பாடுகளின் ஊடாக இவை அனைத்தையும் சாந்தமான மனப்பக்குவத்துடன் சகித்துக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்பட சகல மூத்தோர்களினதும் தலையாய கடமையாகும்.

தான் காணக்கூடிய சகல விடயங்களையும் கேட்கக்கூடிய எல்லாவற்றையும் மற்றும் தன்னைச் சுற்றி நிகழும் சம்பவங்கள் அனைத்தையும் சரியான முறையில் புரிந்துக் கொள்ளும் ஆற்றலை சிறுவயதிலிருந்தே பெற்றுக் கொள்ளல், மேலும் யதார்த்தத்தைப் புரிந்துக் கொள்ளல், சரியான தூர நோக்கு, தனது பலத்தையும் பலவீனத்தையும் இனங்கண்டு வாழ்க்கையை சரியான விதத்தில் திசைமுகப்படுத்தல் போன்ற காரியங்களின் மூலம் சுய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

தனது உள்ளத்தில் ஏற்படுத்தியிருக்கும் தன்னம்பிக்கையை உரிய இலக்கை அடைந்து கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ளல் , மற்றும் தன்னம்பிக்கை இல்லாமல் எந்த விதமான காரியத்தையும் வெற்றியீட்டச் செய்ய முடியாது என்பதை நன்கு உணர்ந்து கொள்ளல், எந்தவொரு பிரச்சினையையும்

எதிர்கொள்ள தன்னம்பிக்கை மிக அவசியம் என்பதை விளங்கிக் கொள்ளல் போன்றவற்றையும் இங்கு சேர்த்துக் கொள்ளலாம்.

சிறு வயதிலிருந்தே சுயமாகச் செயலாற்றுதல் தொடர்பாக விழிப்புணர்வைப் பெற்றுக் கொள்வதற்கான பயிற்சியில் ஈடுபடுதல் மிகவும் அவசியமாகும். அதற்காக தினமும் அதிகாலையில் நித்திரை விட்டு எழுதல், உடல் உளத் தூய்மை போன்ற காரியங்களில் ஈடுபடுதல், காலை உணவை உண்ணுதல், தினமும் பாடசாலைக்குச் செல்லல், படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுதல் போன்ற காரியங்களை சிறுவயது முதல் சிறப்பாகச் செய்வதற்கு பயிற்றுவிப்பது மிகவும் அவசியமாகும்.

## 4.2 சுய முகாமைத்துவம். (Self Management)

சமூக மனவெழுச்சித் திறன்களைக் கருத்தில் கொள்ளும் போது சுய முகாமைத்துவத்தைப் பின்வரும் விடயங்களைக் கொண்டு விளக்கலாம்.

1) உணர்வுகளைக் கட்டுப்படுத்தல்
   Impulse control
2) மன அழுத்த முகாமைத்துவம்
   Stress management
3) சுய ஒழுக்கம்
   Self-discipline
4) சுய ஊக்கம்
   Self-motivation
5) இலக்கு நிர்ணயம்
   Goal-setting
6) நிறுவனத் திறன்கள்
   Organizational skills

(Laburova), லாபுரோவா, 2020 பக்.276 - 277)

ஒவ்வொருவரினதும் உணர்வுகள், எண்ணங்கள், நடத்தைகள் மற்றும் வெவ்வேறு நேரங்களில் அவை எவ்வாறு எழுகின்றன என்பதை இனங்கண்டறிந்து, தன்னில் ஏற்படுகின்ற மன அழுத்தம் மற்றும் பதற்றத்தைத் தவிர்ப்பதற்காக மனதில் தோன்றும் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தனது இலக்குகளை பயனுள்ள விதத்தில் அமைத்துக் கொள்வது இங்கு கருத்திற் கொள்ளப்படுகின்றது.

மேலும் தேவையான சந்தர்ப்பங்களின் போது எதிர்பார்ப்புகள் எதனையும் கருத்திற் கொள்ளாது செயற்படுவதன் மூலம் மனவெழுச்சியை முகாமைத்துவம் செய்யக்கூடிய ஆற்றலை விருத்தி செய்துக் கொள்வது மிக இலகுவானதாக அமையும்.

சுய ஒழுக்கத்தை விருத்தி செய்து கொள்வதற்கு சுய முகாமைத்துவம் மிகவும் முக்கியமானதாகும். பாடசாலையில் காலைக் கூட்டத்திற்கு வரிசைக் கிரமமாகச் செல்லல், தனது தவணை வரும் வரை பொறுமையாக இருத்தல், பெரியோர்கள், ஆசிரியர்களை மதித்தல், சமுதாயத்தில் பல்வேறு சூழ்நிலைகளில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளல் ஆகியவைற்றையும் பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்யக் கூடிய பிரதான காரியங்களாகக் கொள்ளலாம்.

தனது சொந்த அலுவல்களுக்காக அல்லது தனது சொந்த வேலைகளுக்காகத் தன்னைத் தானே ஆர்வப்படுத்திக் கொள்ள முயற்சிப்பது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு பண்பாகும். அம்மா, அப்பா, ஆசிரியர்கள மற்றும் பெரியோர்கள் தன்னை ஊக்குவிப்பதால், ஏதாவது ஒரு செயலில் ஈடுபடுவதை விட, தனது உள்ளத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தித் தானாகவே முயற்சித்தால், தன்னம்பிக்கை கொண்ட ஒருவரை உருவாக்கிக் கொள்ளலாம்.

சமய அறிஞர்கள் மற்றும் வீரதீர தலைவர்களின் வரலாறுகளை சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு வாசிக்க வழியமைத்து அதனைப் பழக்கப்படுத்திக் கொடுப்பதற்கு

முயற்சி செய்வதாயின் அதன் மூலம் ஒரு நல்ல ஆளுமையை பிள்ளைகளிடத்தே உருவாக்கிக் கொள்ள முடியும்.

பிள்ளைகளுக்கு அவர்களின் வாழ்க்கையில் சிற்சில சந்தர்ப்பங்களில் குறிப்பான ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொடுப்பதற்கு பழக்கப்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களின் எண்ணங்களை நேர்மறையாக வழி நடாத்திச் செல்ல வழியேற்படுகின்றது. பாடசாலைக்குச் செல்லும் முதலாம் நாளில், பிறந்தநாளைக் கொண்டாடும் நாளில், புத்தாண்டு பிறக்கும் நாளில், புதிய வகுப்பிற்குச் செல்லும் நாளில் என்றவாறு அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கான இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ளலாம். இதற்காகப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு வழிகாட்ட முடியும்.

எதிர்காலத்தில் ஒரு நல்ல ஆளுமை கொண்ட ஒரு நபரை உருவாக்குவதில் நிறுவனத் திறன்களை வளர்ப்பது மிகவும் முக்கியம் பெறுகின்றது. சிறு வயதிலிருந்தே, பிள்ளைகளுக்கு வீட்டிலும், பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியிலும் சில செயற்பாடுகளை ஏற்பாடு செய்ய வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் வழங்கப்பட வேண்டும். கல்விச் சுற்றுலா செல்லும் போதும், குடும்ப உறுப்பினர்களுடன் உல்லாசப் பயணம் செல்கின்ற வேளையிலும், ஒரு சிறிய விருந்துபசார நிகழ்வொன்றின் போதும் பாடசாலை ஆரம்பிக்கும் போது நடைபெறுகின்ற காலைக்கூட்டத்தின் போதும், கழகக் கூட்டங்கள், அன்னதானம் வழங்குதல் போன்ற நிகழ்வுகளின் போதும் சிறிய பொறுப்புக்களைப் பிளைகளுக்கு வழங்குவதன் மூலம் அவர்கள் நிறுவன நடவடிக்கைகளின் தேர்ச்சிகளையும் அதனை நிர்வகிக்கும் திறன்களையும் பெற்றுக் கொள்வார்கள். இத்தகைய காரியங்கள் பிள்ளைகளை எதிர்காலத்தில் சிறந்த பிரசையாக மாற்றுவதற்கு வழிவகுக்கும் என்பது இரகசியமான விடயமல்ல.

## 4.3 சமூக விழிப்புணர்வு (Social Awareness)

பல்வேறு பின்னணிகள் மற்றும் கலாசாரங்கள் உட்பட பிறரின் புலக்கோணத்திற்கு ஏற்ப பரிவுணர்வைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றலும் நடத்தைகளும் சமூக விழிப்புணர்வு எனப்படும். அதாவது நடத்தைகளுக்காக சமூக, தார்மீக நெறிமுறைகளைப் புரிந்து கொள்வதற்காகவும் குடும்பம், பாடசாலை, சமூக வளங்கள் மற்றும் நலனுதவிகள் என்பவற்றை இனங்கண்டறியவும் இருக்கும் ஆற்றல் எனவும் சமூக விழிப்புணர்வைக் கூறலாம்.

சமூக மனவெழுச்சித் திறன்களின் அடிப்படையில் சமூக விழிப்புணர்வைப் பின்வரும் விடயங்களைக் கொண்டு விளக்கலாம்.

» பல்வேறு கோணங்களில் நோக்குதல்

Perspective-taking

» பச்சாதாபம் -

Empathy

» பன்முகத்தன்மையை மதித்தல்.

Appreciating diversity

» மற்றவர்களுக்கு மரியாதை செய்தல்-

Respect for others

(Laburova, 2020p.276-277)

சமுகத்திற்கு காலைப் பதிக்கும் பிள்ளை, அங்கு காணப்படும் சிக்கலான நிலைமைகளின் போது சமுதாயத்தைப் புரிந்துகொண்டு சமுகத்தின் விருப்பைப் பெற்ற ஒரு பிரசையாக இருக்க வேண்டும்.

அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளவே பிள்ளைகளுக்குக்

கல்வி தேவைப்படுகின்றது. எனவே, சிறுவயதிலிருந்தே சமுதாயத்தைப் பற்றிய விழிப்புணர்வும், சமுதாயத்திற்கு ஏற்ப நடந்து கொள்ளவும் உரிய அறிவூட்டல்கள் வழங்கப்பட வேண்டும்.

சமூக நெறிமுறைகள் சமூக விதிமுறைகள், வெவ்வேறு கலாசாரங்களுக்கு இடையிலான சமூக மதிப்பு என்பவைகள் தொடர்பாகச் சிறுவயது முதல் பிள்ளைகள் அறிவூட்டப்பட்டு தெளிவுபடுத்தப்பட வேண்டும். தங்கள் குடும்பம், பாடசாலை மற்றும் சமூகத்துடன் எவ்வாறு பயனுள்ள உறவைப் பேணுவது என்பதைப் புரிந்து கொண்டால் சமூகம் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கும்?

இன்றைய சமூகத்தில் அன்றாடம் நிகழுகின்ற சம்பவங்கள், மின்னியல், அச்சூடக மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பல்வேறு வழிகளில் பதிவாகினாலும், அவற்றைத் துல்லியமாகப் புரிந்துகொள்ளும் திறமையை யாவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும். மற்ற நபரொருவரின் துக்கம், மகிழ்ச்சி, பயம், வலி போன்ற உணர்வுகள் என்பன எனக்கும் உண்டு. அவற்றை அவர்களைப் போலவே நானும் உணர்கிறேன் என்ற உணர்வு தம்மிடத்திலும் ஏற்பட வேண்டும். ஆனால் இன்றைய சமூகத்தில் பல சந்தர்ப்பங்களில் மக்கள் நடந்து கொள்ளும் விதத்தை அணுகிப் பார்க்கும் போது அவ்வாறான தன்மை மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றதை கண்டு கொள்ளலாம்.

## 4.4 ஆளிடைத் தொடர்புகளை மேற்கொண்டு செல்லும் திறன்கள் (Relationship Skill)

வெவ்வேறு தனிநபர்கள் மற்றும் குழுக்களுடன் ஆரோக்கியமான மற்றும் பலனளிக்கும் உறவுகளை வைத்திருக்கும் மற்றும் பராமரிக்கும் திறனை இது குறிக்கிறது.

தெளிவான தொடர்பாடலுக்கும், மிகச்சிறந்த முறையில் செவிமடுப்பதற்கும் மற்றவர்களுடன் ஒத்துழைத்து நடந்து கொள்வதற்கும் பொருத்தமற்ற சமூக அழுத்தங்களை எதிர்ப்பதற்கும், மோதல்களைத் திறம்பட விவாதிப்பதற்கும், தேவையின் போது உதவியை வழங்குவதற்கும் தேவையின் போது உதவியைப் பெறுவதற்கு மற்றும் ஒத்துழைப்பை வழங்குவதற்கும் ஆளிடைத் தொடர்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பிரகாரம் ஆளிடைத் தொடர்புகளை மேற்கொள்வதை சமூக மனவெழுச்சித் திறன்களின் அடிப்படையில் இவ்வாறு குறிப்பிடலாம்.

1) தொடர்பாடல் - Communication
2) சமூக உறவைப்பேணல் - Social engagement
3) உறவைக் கட்டியெழுப்புதல் - Relationship-building
4) ஓர் அணியாகச் செயற்படல் - Teamwork

Laburova, (லாபுரோவா , 2020 p.276-277)

நாம் யாரும் தனியாக வாழ முடியாது. பிறப்பு முதல் இறப்பு வரை பிறரின் உதவி தேவை. எனவே, குழந்தைகள் மற்றவர்களுடன் மரியாதையான உறவைப் பேணுவதற்கு சிறு வயதிலிருந்தே கற்றுக்கொள்ள வேண்டும்.

சமூக உறவுகள் தனித்தனியாகவும் குழுக்களாகவும் கட்டமைக்கப்பட வேண்டும். இங்கு முறையான தொடர்பாடல் திறன், பிறருக்கு செவிமடுக்கும் ஆற்றல், மற்றவர்களுடன் தொடர்புற்று காரியமாற்றும் போது ஏற்படும் அழுத்தங்களைச் சமாளித்தல், கலந்துரையாடி உறவுகளைப் பலப்படுத்துதல், ஒருவருக்கொருவர் உதவுதல் என்பன நல்ல சமூக உறவுகளைப் பெறுவதற்கு துணையாக இருக்கும்.

## 4.5 பொறுப்பான தீர்மானம் எடுத்தல் (Responsible decision-making)

நெறிமுறைகள், பெறுமானங்கள், பாதுகாப்புத் தேவைகள் மற்றும் சமூகம் ஏற்றுக் கொள்ளும் விதமாக அனைவரும் இணங்கக்கூடிய நெறிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தனிப்பட்ட நடத்தை மற்றும் சமூக தொடர்புகள் பற்றிய பயனுள்ள தெரிவுகளை மேற்கொள்ளும் திறனைக் குறிக்கிறது. அத்துடன் பல்வேறு செயல்களின் பிரதி விளைவுகளைப் பற்றிய யதார்த்தமான மதிப்பீடு மற்றும் தன்னையும் மற்றவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு கருமமாற்றல் என்பன இதனுடன் தொடர்புபடுதலைக் குறிப்பிடுகின்றது.

சமூக மனவெழுச்சித் திறன்களின் கீழ் எவ்வாறு பொறுப்பான முடிவுகளை எடுப்பது என்பதை இது விவரிக்கின்றது.

1) பிரச்சினையை இனங்காணல்
   Identifying problems
2) நிலைமையை பகுப்பாய்வு செய்தல்
   Analyzing situations
3) பிரச்சினையைத் தீர்த்தல்
   Solving problems
4) கணிப்பீடு செய்தல்
   Evaluating
5) பிரதிபலிப்பு
   Reflecting
6) தார்மீகப் பொறுப்பு
   Ethical responsibility

(Laburova, 2020 p.276-277)

சமூகத்தில் நிலவுகின்ற பெறுமானங்கள், மதிப்புகள் மற்றும் சட்டதிட்ட விதிகளை மதிக்கும் அதே வேளை வலுவான முடிவுகளை எடுக்கும் ஆற்றலை அந்நபரிடத்தே ஏற்படுத்தல்

மிக முக்கிய திறனாகக் கருதப்படுகிறது. தற்போது இருக்கும் நிலைமையின் கீழ் பிரச்சினை எதுவென இனங்கண்டறிதல், காணப்படும் நிலைமையை இனங்காணல், பிரச்சினைக்கு பொருத்தமான ஒரு தீர்வைப் பெற்று தீர்த்துக் கொள்ளல் என்பன சகல பிள்ளைகளிடமும் காணப்பட வேண்டியதொரு திறனாகும். அத்தகைய திறன் குறைவடைந்த காரணத்தினால், சமூகத்தில் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேல்மட்டமாகவும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வது சிக்கல் நிறைந்த சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை ஏற்பட பிரதான காரணம் உண்மையிலேயே பொறுப்பு வாய்ந்த தீர்வைப் பெற்றுக் கொள்வதற்குத் தயக்கம் காட்டுவது அது தொடர்பாக அசமந்தப் போக்காக இருப்பதினாலேயாகும்.

அது மட்டுமல்ல பிரச்சினையின் தன்மை அல்லது காரணத்தை அல்லது அதன் பின்னணியை ஆய்வு செய்வதற்கு உரிய வாய்ப்பை வழங்காமையாகும்.

இங்கு மேலோட்டமாகத் தோன்றுவதைத் தவிர கண்ணுக்குத் தெரியாத ஆழமான விடயங்கள் ஆய்வு செய்யப்படாமல் இருப்பதுமாகும். இது சமுதாய முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக உள்ளது.

தன்னால் நிறைவேற்றப்பட்ட ஒரு செயற்பாடு தொடர்பாகத் தான் செய்த வேலையை மறுபரிசீலனை செய்வதும் மிக முக்கியமாகும். இரவு நித்திரைக்குச் செல்லும் முன் நாம் செய்யும் வேலைகளின் வெற்றி தோல்வியை சிந்தித்துப் பார்ப்பது, அதன் பயன்பாடுகளை கவனத்திற் கொள்வது போன்றன அடுத்த நாள் பணிகளைச் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் மாற்ற உதவும்.

இது பிள்ளைகளுக்கு சிறுவயதிலிருந்தே பயிற்சி அளிக்கக் கூடிய பணியாகும். இது பிள்ளைகளின் வாழ்நாள் இலக்கினை வெற்றிகரமாக அடையச் செய்வதற்கு வழியமைக்கும். பிள்ளைகள் தங்கள் வாழ்க்கை இலக்குகளை அடைய உதவுவதோடு, அவர்களைச் சிறப்பாகவும்,

பயனுள்ளதாகவும், திறமையாளர்களாக மாற்றும். தாங்கள் செய்யும் சிறு தவறுகளையும் செய்யாமல் இருக்க ஆசைப்படுவார்கள். பிள்ளைகள் தெளிவாகச் சொல்லும் திறனையும், பிறர் சொல்வதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், சுறுசுறுப்பாகக் கேட்பதற்கும் பிள்ளைகளுள் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் பல்வேறு சூழ்நிலைகளில் பங்கேற்பதன் மூலம், அந்த சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எந்த வகையான உறவுகளைக் கட்டியெழுப்ப வேண்டும் மற்றும் தனக்குப் பொருத்தமான ஏற்றுக் கொள்ளக்கூடிய உறவுகள் என்ன என்பதைப் பிள்ளைகள் புரிந்து கொள்ள முடியுமாக இருக்கும். பெற்றோர் - குழந்தை உறவுகள் எவ்வாறானது என்பதையும் பிள்ளைகள் புரிந்து கொள்ள முடியும். பெற்றோர்- பிள்ளைகளுக்கு இடையிலான உறவுகள், மாணவர்- ஆசிரியர்களுக்கிடையேயான உறவுகள், பிள்ளைகள் - மூத்தோர்கள் உறவுகள் மற்றும் பலவற்றைப் பற்றிய சரியான விளக்கத்தைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டும். இது சமூகத்தில் நிலவும் இணக்கப்பாடற்ற உறவுகளைக் குறைப்பதுடன், அவற்றின் எதிர்மறையான விளைவுகளையும் குறைக்கும். எனவே பிள்ளைகளுக்கு சமூக உறவுகளை உணர்த்துவது மிக முக்கியமாகும்.

நம் வாழ்வில் பல சமயங்களில் குழுக்களுடன் இணைந்து செயல்பட வேண்டியிருக்கும். இது ஒரு அற்புதமான திறனாகும். குழு உணர்விலிருந்து விலகிச் செல்பவன் தனிமையாக்கப்படலாம். தனிமையாக இருப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாது. பிள்ளைகள் தமக்கு மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் அடிப்படைத் திறன்களை வளர்த்துக் கொண்டால் ஒரு குழுவாகச் சேர்ந்து காரியமாற்றுவது அவ்வளவு கடினமானதாக இருக்காது. ஒரு மகிழ்ச்சியான மற்றும் சுவாரஸ்யமான வாழ்க்கைக்கு குழு உணர்வுடன் செயற்படும் தன்மை மிகவும் அவசியம். மற்றவர் மீது குற்றம் சாட்டாமல், தனக்கு ஏற்படும் அசௌகரியங்களை அல்லது சிரமங்களைத்

தவிர்க்கவோ அல்லது பொறுமையாக இருந்து தீர்த்துக் கொள்ளவோ பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். சில சமயங்களில் பெரியவர்களும் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்கு அதிக அன்பையும் அக்கறையையும் செலுத்தி அவர்களது எல்லா விதமான காரியங்களிலும் பங்கேற்று துணை செய்கிறார்கள். இதன் காரணமாக அத்தகைய பிள்ளைகளுக்கு ஒரு காரியத்தை தங்கள் சொந்த முயற்சியில் தாமாகவே செய்து கொள்ளக்கூடிய ஆற்றலும் திறனும் இல்லாமல் போகக்கூடிய ஒரு நிலை கூட ஏற்படலாம். இதனை

பெரியவர்களும், ஆசிரியர்களும் புரிந்துகொண்டு பிள்ளைகளுக்கு அவர்களது சொந்த திறமையை வெளிகாட்டும் விதமாக சந்தர்ப்பங்களையும் வாய்ப்புக்களையும் வழங்க வேண்டும்.

இன்றைய சமுகத்தில் அதீத பணிச்சுமை காரணமாகப் பெற்றோருக்கு தமது பிள்ளைகளைக் கவனிப்பதும் அவர்களின் அனைத்து வேலைகளை செய்வதும் மிகவும் கடினமான காரியமாக இருக்கின்றது. எனவே, அவர்களது பாதுகாப்பும், மற்றும் கரிசனை தொடர்பாகவும் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு கண்டறிதல் போன்ற செயற்பாடுகளுக்கு உரிய திறன்களை அவர்கள் பெற்றுக் கொள்ளும் விதமாகவும் செயலாற்றுவது மிகவும் முக்கியமாகும்.

மேலே கலந்துரையாடப்பட்ட சமூக மனவெழுச்சித் திறன்களை பாடசாலைக் கல்வி முறைமைகளின் ஊடாக மிகவும் பயனுள்ள விதத்தில் பிள்ளைகளுக்கு வழங்கக்கூடியதாக அமைவது சமூக மனவெழுச்சித் திறன்களை மிகவும் சிறப்பாக செயற்படுத்தினால் மாத்திரமேயாகும்.

# 05

# சமூக மனவெழுச்சிக் கற்றல்- SEL


# Socio Emotional Learning -SEL



சமூக மனவெழுச்சி சார் கற்றல் என்பதைப் பிள்ளைகள் மற்றும் பெரியவர்கள் புரிந்து கொள்வதற்கும், உணர்ச்சிகளை முகாமைத்துவம் செய்வதற்கும், நேர்மறையான இலக்குகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் அதனை அடைவதற்கும், மற்றவர்கள் தொடர்பாக மன இரங்கலுடன் காரியமாற்றுவதற்கும், நேர்மறையான ஆளிடைத் தொடர்புகளை உருவாக்குவதற்கும், அதனைத் தொடர்வதற்கும் மற்றும் பொறுப்பு வாய்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அறிவு, திறன் மனப்பாங்கு சிறந்த அணுகுமுறைகள் என்பவைகளைப் பெற்று அதன் ஊடாக பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் என அறிமுகஞ் செய்யலாம். (CASEL,2015).

சமூக மனவெழுச்சிக் கற்றல் நடைபெறும் விதம் பின்வருமாறு.

1) வகுப்பறை
2) பாடசாலை
3) குடும்பம் மற்றும் பாதுகாவலர்கள் /பராமரிப்பாளர்கள்
4) சமூகம்




(CASEL 2021)

பட விளக்கம் 5.1 சமூக மனவெழுச்சித் திறன்களைச் செயற்படுத்துதல் தொடர்பாக CASEL இன் படிவம்.


## சமூக மனவெழுச்சிக் கற்றலின் நோக்கங்கள்

சமூக மனவெழுச்சித் திறன்கள் தொடர்பாகக் கற்றலின் நோக்கங்களை கவனத்திற் கொள்ளும் போது டாலக் (Darleck) 2011 மற்றும் குழுவினர் பரந்த நோக்கங்கள் இரண்டினை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

1. மாணவர்களின் சுய விழிப்புணர்வு, மற்றும் சுய முகாமைத்துவம், சமூக விழிப்புணர்வு, ஆளிடைத் தொடர்புகள், பொறுப்பு வாய்ந்த தீர்மானங்களை மேற்கொள்தல் போன்ற திறன்களை மேம்படுத்துதல்.

2. தனக்காகவும், மற்றவர்களுக்காகவும் பாடசாலைக்காகவும் மாணவர்களின் மனப்பாங்கு மற்றும் நம்பிக்கைகளை மேம்படுத்தி விருத்தியடையச் செய்தல்.

சமூக மனவெழுச்சித் திறன் தொடர்பான கற்றலை பின்வரும் 04 விதமான நுழைவுகள் மூலம் பாடசாலையினுள் செயற்படுத்தலாம். அதன்படி, திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள், திட்டத்தை நடைமுறைப்படுத்திய பின் மாணவர்களிடம் காணக்கூடிய நடத்தை மாற்றங்கள் என்பன பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன.




சமூக மனவெழுச்சித் திறன் கற்றல் அணுகுமுறைகள்.

2015 CASEL Guide: Effective Social and Emotional Learning Programs - Middle and High School Edition

சமூக மனவெழுச்சித் திறனைக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறையாகப் பயன்படுத்தும் போது கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்களாவன.

- மாணவர்களையும் ஆசிரியர்களையும் இலக்கு வைத்து செயற்படுதல்.
- பாடசாலைப் பாடத்திட்டத்தின் மூலம் சமூக மற்றும் மனவெழுச்சித் திறன்களை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதை இனங்கண்டறிதல்.
- சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்தல் தொடர்பாக ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சி அளித்தல்.
- சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்தல் தொடர்பாக பாடசாலை மற்றும், வகுப்பறையில் விசேட செயற்பாடுகளை மேற்கொள்ளத் திட்டமிடுதல்.

» சமூக மனவெழுச்சித் திறன்கள் கற்றல் செயற்பாடுகள் என்பன குடும்பம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தில் செயற்படுவதை மற்றும் நடைமுறையில் இருப்பதை உறுதி செய்தல்.

» சமூக மற்றும் மனவெழுச்சித் திறன்களைக் கற்றல் செயற்பாடுகள் தொடர்பாக கண்காணித்தல், பின்னூட்டல் மேற்கொள்ளல் மற்றும் ஆலோசனை வழங்குதல் போன்றவற்றை மேற்கொள்ளல்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினுள் சமூக மனவெழுச்சி கற்றல்களை மேற்கொள்ளல் தொடர்பாக உறுதி செய்வதற்கு ஆசிரியர் நடிவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய முறைகள்.

» ஆசிரியர்கள் சமூக மனவெழுச்சித் திறன்களைக் கற்றல் தொடர்பாக , முழுமையான விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

» பாடசாலைப் பாடத்திட்டத்தில் சமூக மனவெழுச்சித் திறன்களைக் கற்பித்தல் தொடர்பாக மேற்கொள்ளக் கூடிய பாட உள்ளடக்கங்களை ஆக்கத்திறனான முறையில் இனங்காணல்.

» சமூக மனவெழுச்சித் திறன்கள் கற்றலை உறுதி செய்வதற்காக ஆசிரியரால் மாணவர்களுக்கு ஆர்வமும் உந்துதலும் வழங்கப்படல்.

» மாணவர்களுடன் சிறந்த, பயனுள்ள இடைத்தொடர்புகளைப் பேணுதல்.

» மாணவர்களை (பிறருடன் இணைந்து) கற்றலுக்கு ஊக்குவித்தல்.

» மாணவர்களை நேர்மறையான நோக்கங்களை அடைய திசைமுகப்படுத்தல்.

» வகுப்பறை நிருவாகத்தை மேம்படுத்தி விருத்தி செய்தல்.

# 06

# சமூக மனவெழுச்சித் திறன் கற்றலைப் பாடசாலையினுள் செயற்படுத்துதல்.

# Implementation of SEL in school level



இன்று பாடசாலைப் புலத்தினுள் முறையான கல்வித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதோடு அதற்கு அடுத்த படியாக இணைப்பாடத்திட்ட செயற்பாடுகளும் மற்றும் மறைவான முறையில் பிள்ளைகளை ஊக்குவிக்கும் பாடத்திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலைப் புலத்தினுள் சமூக மனவெழுச்சி சார்ந்த கற்றல் தொடர்பான நோக்கத்தை உருவாக்குவது காலத்தின் அவசரத் தேவையாக உள்ளது. இதற்குப் பாடசாலையில் கடமையாற்றுகின்ற சகல தரப்பினரினதும் மற்றும் சகல துறையினரினதும் பங்கேற்றலும் அவ்வாறே பங்களிப்பும் முக்கியமாக் தேவைப்படுகின்றது.

சமூக மனவெழுச்சித் திறன்களைக் கற்றல் வேலைத்திட்டங்கள் மூலம், பாடசாலையில் கல்வி பயிலும் சகல பிள்ளைகளினதம் கல்வி முன்னேற்றத்தில் கவனம் செலுத்தப்படுகின்றது. அதற்கு அடுத்தபடியாகப் பிள்ளைகளின் உள வளர்ச்சியையும், மாணவர்களின் சமூக வளர்ச்சியையும் விருத்தி செய்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலையினுள் சமூக மனவெழுச்சித் திறன்கள் தொடர்பான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு செல்லும் போது பின்வரும் அம்சங்களின் மூலம் பிள்ளைகளின் விருத்தியைக் கண்டறியலாம்.

1. பாடசாலையினதும் பிள்ளைகளினதும் கல்வி முன்னேற்றத்தை விருத்தி செய்தல்
   (Better Academic performance)

2. பிள்ளைகளின் மன எழுச்சி மற்றும் நடத்தைக் கோலங்களை விருத்தி செய்தல்
   (Improve attitudes & behavior)

- மாணவர்களிடையே தங்களைப் பற்றியும், மற்றவர்கள் மற்றும் பாடசாலையைப் பற்றியும் சிறந்த மனப்பாங்கை ஏற்படுத்தல்.

- மாணவர்கள் தம்மிடையே பரஸ்பர ஒத்துழைப்புத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்குத்துணையாக இருத்தல்.

- மற்றவர்களின் உணர்வுகளை இனங்கண்டறிய உதவி செய்தல்.

- மற்றவர்களுக்காக இரங்கும் தன்மையை உருவாக்குதல்.

- தொடர்பாடல் திறனை விருத்தி செய்தல்.

- பயனுள்ள விதத்தில் முரண்பாடுகளைத் தீர்த்தல்.

- பொறுப்பு வாய்ந்த முறையில் தீர்மானங்களை மேற்கொள்ளல்.

3. மாணவர்கள் மத்தியில் ஏற்படும் அசாதாரண நடத்தைக் கோலத்தைக் குறைத்தல்.
   (Fewer negative behaviors)

- ஆவேசமான (ஆக்ரோசமான) மனக்கிளர்ச்சியை மட்டுப்படுத்தல்.

- ஒழுங்கீனமான (முறையற்ற) செயற்பாடுகளைக் குறைத்தல்.

- துஷ்பிரயோகம் மற்றும் குற்றவியல் செயற்பாடுகளில் இருந்து விடுவித்தல்

- மற்றவர்கள் மீது தேவையற்ற முறைப்பாடுகளை முன்வைப்பதைத் தவிர்த்தல்.

பாடசாலையினுள் சமூக மனவெழுச்சித் திறன்கள் தொடர்பான கற்றல் வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அதிபர் உட்பட நிருவாக குழு, ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட பாடசாலைச் சமுகத்தின் அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்பு தேவைப்படுகின்றது.

பாடசாலையினுள் செயற்படுத்தப்பட்டு வருகின்ற வருடாந்த வேலைத் திட்டத்தில் சமூக மனவெழுச்சித் திறன்களைக் கற்றுக் கொள்ளல் தொடர்பான செயற்பாடுகள் சேர்க்கப்பட வேண்டும். இந்த செயற்பாடுகள் பாடசாலைக்குப் பாடசாலை வேறுபடலாம். எனினும் பாடசாலைக்குப் பொருத்தமான சமூக மனவெழுச்சி தொடர்பான வேலைத் திட்டங்களைத் தயாரிக்கும் போது பாடசாலையின் வகை

(1AB , 1C , 2 அல்லது 3) மற்றும் பாடசாலையின் சுற்றுச் சூழல் என்பன மிகவும் செல்வாக்குச் செலுத்தும்.

பாடசாலைகளுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள சமூக மனவெழுச்சித் திறன்களைக் கற்றல் தொடர்பான வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு நீடித்து நிலைக்க காரணமாக அமைவது, அப்பாடசாலையின் அதிபர் மற்றும் பெற்றோர்களினதும் பாடசாலைச் சமுகத்தினதும் அவ்வேலைத் திட்டங்கள் தொடர்பான சரியான திட்டமிடல்கள் உயர்மட்ட நிலையில் காணப்பட்டு உரிய பங்களிப்பு வழங்கப்பட்ட பிரகாரமேயாகும்.

இங்கு உரிய பாடசாலையின் முகாமைத்துவக் குழு அதற்குத் தேவைப்படுகின்ற உரிய வளப்பங்களிப்பைச் சரியான முறையில் மேற்கொண்டு பொருத்தமான கற்றல் சூழலை ஏற்படுத்தியிருத்தல் வேண்டும்.

அவ்வாறே , வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் சமூக மனவெழுச்சி தொடர்பான கற்றல் வாய்ப்புகளை எவ்வாறு செயற்படுத்துவது என்பது குறித்து ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சியும் வழங்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களின் பங்கேற்புடன் பாடசாலையினுள் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பாடசாலை முகாமைத்துவக் குழுவினால் கண்காணிக்கப்பட்டு அதன் பலம் மற்றும் பலவீனம் ஆகியவற்றை கண்டறிந்து, தேவைக்கேற்ப திட்டங்களை வகுக்க வேண்டும்.

சமூக மனவெழுச்சித் திறன்களைக் கற்றல் தொடர்பாக வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய விசேட செயற்பாடுகள்

## 1. சுய விழிப்புணர்வு (Self-awareness)

- அன்றாடம் மேற்கொண்டு செல்லப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக மாணவர்களை அறிவூட்டம் செய்வதற்காக வகுப்பறையில் ஒரு காட்சிப் பலகையைப் பராமரித்தல், மேலும் அன்றைய தினம் தொடர்புடைய செயற்பாடுகளைக் அதில் குறிப்பிடுவதன் மூலம் மாணவர்களை உள ஆயத்த நிலையுடனும் பாதுகாப்பு உணர்வுடன் பங்கேற்க வாய்ப்பளித்தல்.

- தினமும் காலையில் ஒவ்வொரு மாணவருக்கும் தங்களைப் பற்றியும் தமது வாழ்க்கை அனுபவங்கள் தொடர்பான நிகழ்வுகள் பற்றியும் சுமார் 2 நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பளித்தல்.

- கடந்த காலத்தில் மாணவர்கள் கற்றுக்கொண்ட விடயங்களை மீளவும் நினைவுபடுத்துவதற்கும், அவர்கள் அவ்வாறு மிகவும் சிறந்த முறையில் கற்றுக்கொண்ட விதம் தொடர்பாகவும் கேட்டறிதல்.

- வகுப்பறைக் கருமங்களை ஆரம்பிப்பதற்கு முன், மனதை ஒருமுகப்படுத்திக் கொள்வதற்காக சுமார் 2 நிமிடங்கள் தியானச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

- தான் கற்றுக் கொள்ளும் பாடங்கள் தொடர்பான அவர்களின் அனுபவங்களைப் பற்றி கேட்டறிதல்.

- வகுப்பறையில் சேரும் புதிய மாணவர்களிடம் மிகவும் நெருக்கமாகப் பழகி, அவர்கள் தொடர்பான விடயங்களை அறிந்து, வகுப்பில் உள்ள மற்ற மாணவர்களுக்கு அவர்களைப் பற்றி தெரியப்படுத்தல்.

- மாணவர்களுக்கு, அவர்களின் கற்றல் தொடர்பாக தன்னைத் தானே சுய ஆர்வமூட்டல்களை செய்து கொள்வதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துதல்.

- மாணவர்களின் எதிர்கால இலக்குகள் தொடர்பாகக் கலந்துரையாடி தகவல்களை அறிந்துக் கொண்டு அந்த இலக்குகளை நோக்கி அவர்கள் எவ்வாறு பயணிக்க முனைய வேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்க ஊக்குவித்தல்.

- மாணவர்களுடன் SWOC (பலம், பலவீனங்கள், வாய்ப்புகள், சவால்கள்) பகுப்பாய்வை மேற்கொள்ளல்.

## 2. சுய முகாமைத்துவம்.

## (Self-management)

- மாணவர்களுடன் இணைந்து வகுப்பறையில் மேற்கொண்டு செல்ல வேண்டிய சட்ட திட்டங்களைத் தயாரித்தல். இங்கு மாணவர்களைச் சிந்தனைக் கிளர்வுக்கு உட்படுத்தி அவர்களின் கருத்துக்களை அறிந்துக் கொண்டு அது தொடர்பாக மிக முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக நேர சூசியொன்றைத் தயாரித்தல். பரீட்சை நடைபெறும் திகதிகள் என்பவற்றை அத்திட்டத்தினுள் உட்படுத்தல். அதன் அடிப்படையில் சுய முகாமைத்துவத்தை பிள்ளைகளிடத்தே தோற்றுவித்தல்.

- வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நிறைவு பெற்றதன் பின்னர் வழங்கப்படும் வீட்டுப் பயிற்சியை (Home work) மேற்கொள்ள சிறிதளவு நேர அவகாசமொன்றை வகுப்பறையினுள் வழங்குதல்.

- மாணவர்கள் பாடசாலையினுள் அர்ப்பணிப்புடனும் உற்சாகத்துடனும் தமது காரியங்களை மேற்கொள்ளும் போது, அவர்களுக்கு எதிர்காலத்தில் பொருத்தமான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை விளக்குதல்.

- பாடங்களை முயற்சி செய்து கற்றுக் கொள்வதன் மூலமாகவும் போதிய பயிற்சிகளைச் செய்வதன் காரணமாகவும் மிகவும் சிறந்த முறையில் கற்றுக் கொள்ளலாம் என்பதை விளக்குதல்.

- மாணவர்களை சிறு சிறு குழுக்களாகப் பிரித்து அவர்களது கருத்துக்களை பிறருடன் பரிமாறச் செய்ய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- பரீட்சைக்கு முன்னர் ஏற்படும் மன அழுத்தத்தையும் மேலும் பரீட்சைப் பற்றிய அச்ச உணர்வுகளையும் இல்லாமல் செய்து பரீட்சைக்குப் பின்னர் கிடைக்கவுள்ள பெறுபேறு தொடர்பாக ஏற்படும் நிச்சயமற்ற நிலையை முற்றாகத் தவிர்க்க மாணவர்களைத் தயார்படுத்துதல்.

- தமக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தாமாகவே தீர்வைக் கண்டறிய மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல். மேலும் தீர்வுகளைக் கண்டறிய பல்வேறு நுட்பங்கள், அணுகுமுறைகள் மற்றும் உத்திகள் இருந்த போதிலும் அவற்றுள் சிறந்த தீர்வு எதுவாகும் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.

## 3. சமூக விழிப்புணர்வு (Social Awareness)

- சிறந்த செயல் நூல்கள்
- குழுச் செயற்பாடுகள்
- பல்வேறு மத சார்ந்த மற்றும் கலாசார நிகழ்வுகளில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்தல்.
- மாணவர்களை விநோத மற்றும் இரசனை மிகுந்த செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்.

## 4. ஆளிடைத் தொடர்புகளை மேற்கொள்ளல் தொடர்பான திறன்கள். (Relationship Skills)

- ஒருவரையொருவர் அறிமுகமாகுவதற்கு வாய்ப்புகளை வழங்குதல். (திறமைகள், பலவீனங்கள், ஆற்றல்கள் - ஆர்வம்)
- சமூகத்தில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்கள் தொடர்பாக அறிவூட்டம் செய்வதற்கும், அவற்றில் கலந்து கொள்வதற்கும் வாய்ப்புகளை ஏற்பாடு செய்தல். (வெள்ளம், அவசரநிலை போன்ற அனர்த்தங்கள் மற்றும் நிகழ்வுகள்)
- குழுச் செயற்பாடுகள்.
- வகுப்பு வட்டங்களை நடாத்துதல்.

- பன்முகத் தன்மைக் கொண்ட நிகழ்வுகளை கொண்டாடுதல். (பல்வேறு கலாசாரங்கள், பின்னணிகள் மற்றும் ஆற்றல்களைக் கொண்டவர்களைப் பற்றி கலந்துரையாடவும் கற்றுக் கொள்ளவும் நேரத்தை செலவிடுதல்).

## 5. பொறுப்பு வாய்ந்த தீர்மானத்தை மேற்கொள்ளல்.

## (Responsible Decision Making)

- தற்போதைய சூழ்நிலையில் ஒவ்வொருவரும், அவர்கள் எதிர்நோக்கவுள்ள அல்லது முகங்கொடுக்கவுள்ள பிரச்சினைகள் தொடர்பாக போதிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்.

- வீட்டில் ஏற்படும் பிரச்சினைகள், சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் என்பவற்றை இனங்கண்டறிய ஆர்வமூட்டுதல்.

- தற்போதைய சூழ்நிலையைப் பகுப்பாய்வு செய்யப் பழக்குதல்.

- பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளப் பொருத்தமான அணுகுமுறைகளைக் கண்டறிதல்.

- தான் செய்த நற்செயல்களைப் போலவே, பிறர் செய்யும் நற்செயல்களையும் பாராட்டப் பழகிக் கொள்ளல்.

# 07


# சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்வதற்காக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள்.

# Activities to develop socio emotional skils



பிள்ளைகளின் சமூக மனவெழுச்சித் திறன்கள் விருத்திக்கான செயற்பாடுகளை பல் வேறு பட்ட சந்தர்ப்பங்களில் ஏற்பாடு செய்து கொள்ள முடியும். குறிப்பாக பாடசாலையினுள், வீட்டில் அல்லது சமூக செயற்பாடுகள் போன்ற நிலைமைகளில் பிள்ளைகளுக்கு இவ்வாறான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இவ்அத்தியாயம் வகுப்பறையினுள், வகுப்பறைக்கு வெளியே மற்றும் இணைப்பாட செயற்பாடுகளின் போது செயற்படுத்தத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக எடுத்துக்காட்டுக்கள் சிலவற்றை முன்வைத்து அதனை ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் திட்டமிட்டு செயற்படுத்தக்கூடியவாறு பல உதாரணங்களுடன் கலந்துரையாடப்படுகின்றது.

**01. முகங்களும் அவை தெரியப்படுத்தும் முகபாவங்களையும் இனங்காணல்.**




முகங்களினால் காட்டப்படுகின்ற மேற்படி உணர்வுகள் அல்லது முகபாவங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

பாடசாலையினுள் காணப்படுகின்ற வசதிகள் தொடர்பாகக் கருத்திற் கொண்டு (வீடியோ ஒளிப் படங்கள்/ காணொளிகள் மூலம்) பிள்ளைகளினால் வெளிகாட்டப்படும் முகபாவங்கள் அல்லது முக உணர்வுகள் (மேற்படி முகபாவங்களில் மிகவும் சிறந்த முக பாவம் எதுவாகும் என்பது தொடர்பாக பிள்ளைகளுடன் கலந்துரையாடவும்)

யாராவது ஒருவர் (பிறரின்) கோபத்திற்கு ஆளாகும் போது அல்லது தானே கோபத்திற்கு உட்படும் போது தனது முகத்தின் தோற்றம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை கண்ணாடியில் பார்ப்பதற்கு பிள்ளைகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல். (எனவே தான் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பது விரும்பத்தக்கது) என்பதை பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டுங்கள்.

**02. உணர்வுகளின் பிரதிபலிப்பு (ஆசியர்களுக்கும் மற்றும் பெற்றோருக்கும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்)**

- தான் மிகவும் கோபமுற்ற அல்லது வருந்திய சந்தர்ப்பமொன்றை மீண்டும் ஒரு தடவை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.
- அத்தகைய சம்பவம் நிகழ்கின்ற வேளை தான் நடந்து கொண்ட விதத்தைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்.?
- தான் நடந்து கொண்ட விதம் யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத விதமாக இருந்தது என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.
- அத்தகைய சந்தர்ப்பத்தில் வெற்றிகரமாக முகங்கெடுப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் எதுவாக இருக்கும் என்பது தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?

- கலந்துரையாடலின் போது மேலெழுந்த விடயங்கள் அல்லது தகவல்கள். தன்னால் இச்செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டியது எத்தகைய தருணத்தில் ஆகும்?

  - கோபமுற்ற வேளையில்.
  - சம்பவம் நடந்து முடிந்த வேளை
  - அமைதியான மன நிலைமைகளின் போது

1) தான் உணர்ந்து கொண்ட விடயங்கள் தொடர்பாக அறிந்து கொள்ளுங்கள்.
2) பயிற்சியின் பிரகாரம் மனவெழுச்சியை முகாமைத்துவம் செய்து கொள்ளலாம் என்பதையும்.
3) அவ்வாறான நிலைமைகளின் போது தன்னைப் பற்றி விளங்கிக் கொள்ள முடியும் என்பதையும் தெளிவுபடுத்தங்கள்.

**03. தான் யார் என்பது தொடர்பாக எளிய முறையில் அறிந்து கொள்ளல்.**

தான் ஓர் ஆசிரியராக வேண்டும் என்பது தொடர்பாக கற்பனை செய்த விதம் , தனது மிகவும் சிறந்த நண்பன், தான் விரும்பும் / விருப்பமான இடம் , விருப்பமான உணவு, தொடர்பாக தனக்கு இயலுமான விடயங்கள் பற்றி மாணவர்களுக்குக் கருத்து தெரிவித்தலும் மேலும் அத்தகைய கருத்துக்கள் தொடர்பாக சுமுகமான முறையில் கலந்துரையாடி விளங்கிக் கொள்ளலும்.

**தன்னைப் பற்றி மிகவும் சரியான முறையில் அறிந்து கொள்ளல்.**

விருப்பு வெறுப்பு, நோக்கம் / இலக்கு, தன்னைப் பற்றி பிறர் கொண்டுள்ள நன்மதிப்பு, தான் மற்றவர்களை நோக்கும் விததம் போன்றன.......(சுற்றாடல், சமயம் போன்ற பாடங்களில் அத்தகைய விடயங்களை மேலெழச் செய்து கலந்துரையாடலாம்.)

இடை நிலைப் பிரிவினருக்கானது

| | விரும்பும் புத்தகம் | நேசிக்கும் மனிதன் | நோக்கம் |
|---|---|---|---|
| நீங்கள் | | | |
| வலது | | | |
| இடது | | | |

(இடது - தனக்கு இடப்புறத்தில் இருப்பவர் அவ்வாறே வலது - தனக்கு வலப் புறத்தில் இருப்பவர்)

**04. ஆவேசம் என்பது யாது என்பதை தெளிவுபடுத்துவதற்கான செயற்பாடுகளை அறிமுகம்செய்தல்.**

» உதாரணம் - பொருத்தமான அபிநய நடிப்பொன்றை முன் வைத்தல்.

» ஆசிரியர் ஒரு படத்தை வரைந்து பின்னர் அதைத் தாறுமாறாகக் கீறுகிறார்.

» அத்தகைய சூழ்நிலையில் மனதை சாந்தப்படுத்தும் முறைகளை அறிமுகப்படுத்தல்.

**05 சுதந்திரமாகவும் சௌகரியமாகவும் கதிரையில் அமருவதற்கு வழிப்படுத்தி அவர்களுக்கு சிறிய இலக்கொன்றை பெற்றுக் கொள்ள அறிவுரை வழங்குதல். (2 நிமிடங்கள்)பிறகு**

- 1-10 வரையிலான நேரத்தை வழங்கி கண்களை மூடிக்கொள்ள அறிவுரை வழங்குதல்.
- கண்களை மூடிக் கொண்ட பின்னர் அயற்சூழலில் கேட்கும் ஒலிகளை செவிமடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
- பிறகு ஏதாவது ஒரு ஒலிக்கு மாத்திரம் செவிமடுக்க வசதி செய்து கொடுத்தல். (2 நிமிடங்கள்)

- இதன் மூலம் பெற்றக் கொண்ட அனுபவத்தை இறுதியில் கலந்துரையாடுதல்.

(பாடத்திட்டத்தினூடாக அல்லது இணைப்பாடத்தினூடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் மூலம் இவ்விடயம் அபிவிருத்திச் செய்யப்பட வேண்டும்.

**06. சுயமுகாமைத்துவம் தொடர்பான மிகவும் பொருத்தமான செயற்பாடுகள்.**

தெளிவுபடுத்துதல், வகிபாவம் ஏற்று நடித்தல், படங்கள் காணொளிகள் மூலம் காட்டப்படுதல்.

- தன்னிடமும் குடும்ப அங்கத்தவர்களிடமும், சமுகத்திலும் ஒழுக்கப் பண்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.
- மலசலகூடத்தைப் பயன்படுத்துதல்.
- எல்லா இடங்களிலும் அதற்குரியவாறு நடந்து கொள்ளும் விதம் (சட்டதிட்டங்களுக்கு அச்சப்பட்டு அல்ல மாறாக தனது நிலையான வாழ்விற்காக)
- தனக்கும் பிறருக்கும் தொந்தரவுகள் இல்லாத நடத்தையைக் கடைப்பிடித்தல்.

  » தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் அறிந்து கொள்ளல்.
  » நான் பாடசாலையில் எவ்வாறு நடந்து கொள்கிறேன்.?
  » நான் சமுகத்தில் எவ்வாறு நடந்து கொள்கிறேன்.?
  » தனது தவணை வரும் வரையில் காத்திருத்தல் (பொறுமை மற்றும் சகிப்புத் தன்மை)

உதாரணமாக ஆசிரியரிடம் புத்தகத்தைக் காட்டுவதற்கு தனது தவணை வரும் வரை பொறுமையாகக் காத்திருத்தல்.

**07. வீடியோ காணொளியொன்றை பார்வையிட்டதன் பின்னர் அங்கு காணப்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.**

- அவ்வாறு செய்வதற்கான ஆற்றல் எவ்வாறு கிடைத்தது?
- பயன்படுத்திய நுட்ப முறைகள் எவை?
- சபாநாயகரின் இலக்கு
- திரைப்பட இயக்குணர் மேலெழுப்பிய மனிதாபிமான குணவியல்புகள்.

**08 எல்லோரும் சேர்ந்து பாடும் பாடலொன்றை செவிமடுக்கச் செய்தல்.**

- பாடல் தொடர்பாகக் கலந்துரையாடி வாழ்க்கை முறையொன்றை கட்டியெழுப்புதல்.

**09. இரங்கல் தன்மை கொண்ட செயற்பாடுகளுக்கு கவனம் செலுத்துதல்.**

**மூத்தோரை கவனித்தல்.**

பாடசாலைக்கு அண்மையில் வாழக்கூடிய மூத்தோர்களை தெரிவு செய்தல் (வகுப்புக்கு ஒருவர் வீதம்)

» அதற்கான ஒரு நாளைத் தெரிவு செய்தல்.
» அவர்களைப் பாடசாலைக்கு வரவழைத்தல்.
» வரவேற்றல் (வெற்றிலை / மலர்மாலை வழங்கி)
» அவர்களுடன் மனப்பாங்கு மாற்றம் அடையும் விதமாக கலந்துரையாடுதல் (கதைகள் பாடல் மூலமாக)

» அவர்களுடைய தேவைப்பாடுகள் தொடர்பாக உபகார வேலைத் திட்டங்களை ஏற்பாடு செய்தல். (ஆடைகள் உணவுப் பொருட்கள் என்பன வழங்குதல்)

- **வணக்கஸ்தலங்கள் மற்றும் வைத்தியசாலைகள் போன்ற இடங்களில் சிரமதான செயற்பாடுகளை மேற்கொள்ளல். (இடைநிலை மாணவர்களுகக்காக)**

» தரம் 6,7,8 என்பவற்றில் பொருத்தமான ஒரு வகுப்பைத் தெரிவு செய்தல்.

» பிள்ளைகளுடன் கலந்துரையாடியதன் பின்னர் தமது பிரதேசத்தில் சிரமதான வைபவமொன்றை செய்வதற்குப் பொருத்தமான ஒரு இடத்தைத் தெரிவு செய்தல்.

» சிரமதானத்தைத் திட்டமிடுதல் (உரிய நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.)

**10. பிரச்சினையொன்று தோற்றம் பெற்ற போது அதற்குரிய விடைகள் மாற்றீடுகள் என்பவற்றைப் பல்வேறு கோணங்களில் நோக்குதல்.**

» வகுப்பறையிலுள்ள பிரச்சினையொன்றுக்கு (மாணவர்களின் உளநலத்திற்கு பொருத்தமான) மாணவர்களுடன் விடையைக் கண்டறிதல்.

» படத்துடன் தொடர்புடைய பிரச்சினையொன்றுக்கு அல்லது வேலைத் திட்டத்துடன் தொடர்புடைய பிரச்சினையொன்றுக்கு தீர்வைத் தேடுதல் (தரம் 06 இற்கு மேல்)

» தமக்கு அருகில் இல்லாத போது மாணவன் எடுக்கும் தீர்மானம்.

» தனது நோக்கத்தை அடைய முடியாத முடியாத சந்தர்ப்பங்களில்.

**11. ஆரோக்கியமான கதைகள்.**

- மகாத்மா காந்தி நெல்சன் மண்டெலா C.W.W. கன்னங்கரா ஆகியோரின் கதைகளை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து அவ்வாறான நிகழ்வுகளை அவதானிக்கச் சந்தர்ப்பம் வழங்கிய பின், அவர்களைப் போல உரையாற்ற சந்தர்ப்பம் வழங்குதல்.

**12. பிறரை கணிப்பிடுவதன் மூலம் தன்னைத் தானே கணிப்பிட்டுக் கொள்ளல்.**

- கடதாசியொன்றை எடுக்கும் படி கூறுதல். பின்னர் வகுப்பிலுள்ள சகல மாணவர்களினதும் பெயர்களை அதில் எழுதச் செய்து, அவர்களுடைய பெயருக்கு முன்னால் அவர்கள் செய்த ஏதாவது நற்செயலை எழுதுவதற்கு வழிப்படுத்தல்.

- அவ்வாறு எழுதிய சகல கடதாசிகளையும் ஒன்று சேர்த்து ஒவ்வொரு பிள்ளையினதும் நற்பழக்கங்களை ஒவ்வொரு தாளிலும் எழுதுதல்.

- தமக்குரிய ஒழுக்கப்பண்பு எழுதப்பட்ட கடதாசியை உரியவரிடம் வழங்குதல்

- அவ்வறே பிறரைப் போலவே தானும் பல பெறுமானங்கள் கொண்ட ஒருவன் என்பதையும் அதனைக் கொண்டு வாழ்க்கையை அர்த்தமுள்ள வகையில் மாற்றியமைக்கலாம் என்பதை மேலெழச் செய்தல்.

**13. ஒரு பிள்ளையை மற்ற பிள்ளைகளுடன் மதிப்பீடு செய்யக் கூடாது**

மலர் ஒன்றைக் கையில் வழங்கி அந்த மலரில் மாற்றம் செய்து பிரிதொரு மலரை அமைக்கக் கொடுத்தல். அவ்வாறு செய்ய முடியாது என்பதைப் போலவே பிள்ளையையும் மாற்றம் செய்து வேறு பிள்ளையொன்றை எதிர்பார்க்க முடியாது என்பதை (பெற்றோருக்கு) தெளிவுபடுத்துதல் தாய்மைத்துவம் தொடர்பான திறனை விருத்தி செய்தல் வேலைத் திட்டங்கள்


**14. பெற்றோருக்குப் பாடலொன்றை செவிமடுக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.**

- பாடலலைத் தொடர்புபடுத்தி தாய்மைத்துவம் தொடர்பாக கலந்துரையாடுதல். (தாய் தந்தை, சூரிய சந்திரன்.)

# 08

# சமூக மனவெழுச்சித் திறன்களை செயற்படுத்தும் போது எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இடர்கள்

# Challenges and issues encountered in the implementation of SEL



இலங்கை அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பண்புத்தரமான கல்வியை வழங்குவதற்கான தேர்ச்சி மையக் (Competency Based) கல்வியை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கற்பித்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

இதற்காகப் பாடத்திட்டம், பாடப்புத்தகங்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் அனைத்தும் தயார் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சிகள் மற்றும் பாண்டித்திய மட்டங்கள் இனங்கண்டறியப்பட்டுள்ளன. ஆனால், அதற்குத் தேவையான ஆரோக்கியமான மற்றும் உகந்த கண்டறிதல் அணுகுமுறைகள் கற்றல் கற்பித்தல் செயன்முறைகளில் உரிய முறையில் செயற்படுத்தப்படாமல் இருப்பது பாரிய பிரச்சினையாக உள்ளது.

உண்மையில், அத்தகைய அணுகுமுறைகள் வகுப்பறையிலும், பாடசாலையிலும் இருந்தால், சமூக மனவெழுச்சிக் கற்றலை பாடசாலைப் புலத்திற்கு கொண்டு வருவது இலகுவான காரியமாக இருக்கும். ஆனால், எத்தனையோ கல்விச் சீர்த்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டாலும், இன்றளவும் நடைபெறுவது பரீட்சையை மையமாகக் கொண்ட கல்விச் செயற்பாட்டு முறையே ஆகும்.

இது கல்வியுடன் தொடர்புள்ள சகல தரப்பினரினதும் பிரதான அளவுகோலாக மாறியுள்ளது. குறிப்பாகப் பெற்றோர்கள் இத்தகைய செயற்பாடுகளை விட்டும் விலகிச் செல்ல விருப்பம் காட்டுவதில்லை.

இவ்வாறான பின்னணியில், பாடசாலைகளில் சமூக- மனவெழுச்சிக் கற்றலை செயற்படுத்தும் போது ஏற்படுகின்ற முக்கியமான சில சவால்கள் பின்வருமாறு.

1) தற்போதுள்ள கற்றல் - கற்பித்தல் செயல்முறைக்குள் சமூக- மனவெழுச்சிக் கற்றலை உட்படுத்தி அதனூடாக மாணவர்களைப் பயிற்றுவித்தல்.

2) தற்போதய போட்டி மிகுந்த சமூகத்தில் சமூக- மனவெழுச்சிக் கற்றலுக்குப் பெற்றோர்கள் மற்றும் பெரியவர்களை ஊக்கப்படுத்துதல்.

3) தற்போதைய சூழ்நிலையில் நேரத்தை முகாமைத்துவம் செய்தல்.

இத்தகைய பாரிய சவால்களுடன், பல விதமான சிரமங்களும் தோற்றம் பெறுகின்றன.

1) சமூக- மனவெழுச்சிக் கற்றல் தொடர்பாகவும் மற்றும் அதனைச் செயற்படுத்துதல் தொடர்பாகவும் ஆசிரியர்களை அறிவூட்டம் செய்தல்.

2) சமூக- மனவெழுச்சிக் கற்றலை பாடத்திட்டத்தின் ஊடாக முறைசார் விதத்திலும் மற்றும் முறைசாரா விதத்திலும் மேற்கொள்ளல்.

3) விளைவைக் (Impact) கண்டறிய நீண்ட காலம் தேவைப்படுதல்.

4) அளவு ரீதியிலாகக் கணிப்பிடுவதில் சிரமம் ஏற்படுதல்.

5) இதனை வெற்றிகரமக மேற்கொள்ள, சமூகத்தில் பரந்தளவிலான கலந்துரையாடல்கள். கட்டியெழுப்பப்பட வேண்டிய தேவைகள் காணப்படல்.

6) இதனை ஒரு நிலைபேறான (Sustainable) செயற்பாட்டுத் திட்டமாக மாற்றுதல்.

7) வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக குறிப்பிட்ட நேரத்திலேயே இக்காரியத்தை மேற்கொள்ள உறுதி பூணுதல்.

## சவால்கள். (Challanges)

1 **கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் சமூக- மனவெழுச்சி சார் கற்றலை மாணவர்களுக்குப் பரிச்சயமுள்ளதாக மாற்றுதல்.**

தற்போது பாடசாலைகளில் அமுலில் உள்ளது என்ன வென்றால் நிறைவு செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள பாடப் பரப்புக்களை குறித்த நேரத்தில் கற்பித்தலும் அதனூடாக, பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள மாணவர்களுக்கு பயிற்சி அளித்தலுமாகும். இங்கு மாணவர்களுக்கு சமூக மனவெழுச்சிக் கற்றலைப் பெறுவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. இத்தகைய பின்னணியில், பாடசாலையிலுள்ள அனைத்து தரப்பினரும் சமூக மற்றும் மனவெழுச்சிக் கற்றல் தொடர்பாக அறிந்திருக்க வேண்டியது மிக அவசியமாகும்.

2. **சமூக மனவெழுச்சிக் கற்றல் தொடர்பாக கவனம் செலுத்தப் பெற்றோர் மற்றும் பெரியவர்களை ஊக்குவித்தல்.**

நாட்டு பிரசைகள் மத்தியில் வாழ்க்கைக் கண்ணோட்டம் (Life Vision) மற்றும் வாழ்க்கை முறை (Life Style) ஆகியவற்றை ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கு வழியேற்படுத்துதல் வேண்டும். ஒருவர் தான் ஏற்றுக் கொண்ட சமய சித்தாந்தங்களின் படி வாழ்க்கை என்றால் என்ன? என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சிறுவயதிலிருந்தே சமூக உள உணர்வு பூர்வமான கற்றலில் ஈடுபடுத்த கவனம் செலுத்த வேண்டும்.

### 3. நேரத்தை முகாமைத்துவம் செய்தல்.

வகுப்பறையினுள் பாடத்திட்டம், பாடப்புத்தகங்கள், நேரம், பரீட்சைப் புள்ளிகள், பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் அது தொடர்பான ஒரு செயற்பாட்டு முறைமை பொதுவாக நடைமுறையில் உள்ளது. இதன் போது, மாணவர்களின் சமூக மற்றும் மனவெழுச்சிக் கற்றலில் கவனம் செலுத்த ஆசிரியருக்கு மிகக்குறைந்தளவு நேரமே கிடைக்கின்றது. மாணவர்களின் நற்பண்புகளை வளர்ப்பதில் ஆசிரியர்கள் அதீத ஆர்வம் காட்டுகின்ற போதிலும், மாணவர்களை சமூக மனப்பூர்வமான கற்றலில் ஈடுபடுத்த அவர்கள் போதிய கவனம் செலுத்துவது மிகக்குறைவாகும்.

சிக்கல் மிகுந்த தற்போதய சமூகத்தில், கல்விச் செயன்முறைகள் மிகவும் போட்டித் தன்மை மிகுந்ததாகக் காணப்படுகின்றன. இன்றைய சமூகத்தின் பொதுவான எதிர்பார்ப்பு அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதாகும்.

இதன் காரணமாகத்தான் ஆசிரியர்கள், பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் அதிகளவு நேரத்தை ஒதுக்கிச் செயற்படுகிறார்கள். இதன் விளைவாக, மிகவும் சொற்பமாகக் கிடைக்கக்கூடிய நேரத்தில் தேர்ச்சிகளையும் மனப்பான்மையையும் வளர்த்தெடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

## இடர்கள் (Issues)

சமூக- மனவெழுச்சிக் கற்றலைப் பாடசாலைப் புலத்தினுள் மேற்கொள்ளும் போது தோன்றும் இடர்கள்

1. சமூக மனவெழுச்சித் திறன்கள் மற்றும் அதனைச் செயற்படுத்துதல் தொடர்பாக ஆசிரியர்களை அறிவூட்டல்.

கல்வி தொடர்பான எண்ணக்கருக்களை செயற்படுத்துவதில் வகுப்பறையானது பிரதானமான தளமாகச் செயற்படுகின்றது. அதனை வகுப்பறையில் செயற்படுத்துவது ஆசிரியர்களாகும். எனவே, பிள்ளைகளுக்கு மத்தியில் சமூக மனவெழுச்சித் திறன்களை மிகவும் சிறந்த முறையில் வளர்ப்பதற்கு, முதலில் ஆசிரியர்களுக்கு அது தொடர்பான அறிவூட்டம் வழங்கப்பட வேண்டும்.

அறிவூட்டல் நிகழ்ச்சிகளுக்கு ஆசிரியர்களை உரிய நேரத்திற்கு அழைப்பது, நேரம் ஒதுக்குவது, ஆகியன மிகமுக்கியமான பிரச்சினையாகும். ஆசிரியர்கள் மட்டுமன்றி அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களுக்கும் இது தொடர்பான அறிவூட்டம் வழங்கப்பட வேண்டும்.

இங்கு மேலெழக்கூடிய மிகப்பிரச்சினைக்குரிய விடயம் என்ன வென்றால் இவர்கள் யாவரும் பாடசாலைகளில் மிகுந்த பணிச்சுமையைச் செய்யக்கூடியவர்களாக இருப்பதாகும்.

2. **சமூக- மனவெழுச்சிக் கற்றலைப் பாடத்திட்டத்தின் ஊடாக செயற்படுத்தல்.**

சமூக - மனவெழுச்சிக் கற்றல் தொடர்பான செயற்பாடுகளைத் தனிப்பாடமாக செயற்படுத்த முடியாது. இது மாணவர்களின் நடத்தைசார் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு

செயல்முறையாக இருப்பதால், வகுப்பறையில் கற்பிக்கப்படும் அனைத்து பாடங்கள் மற்றும் இணைப் பாடத்திட்ட செயற்பாடுகள் மூலமாகவும் இது தொடர்ச்சியாகச் செயற்படுத்தப்படல் வேண்டும். 21 ஆம் நூற்றாண்டின் கல்வித் திறன்களின் பிரகாரமும் தற்போதைய கல்வி சீர்த்திருத்தங்கள் மூலமும் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே தான் சமூக - மனவெழுச்சிக் கற்றல் எப்போதும் முக்கியத்துவம் பெறுகின்றது.

### 3. அளவு சார் ரீதியில் கணிக்க முடியாமை

சமூக மனவெழுச்சித் திறன்கள் விருத்தியடைந்துள்ளனவா? என்பதைக் கணிப்பிட்டுக் கூறுவதற்கு எவராலும் முடியாது. ஏனெனில் இது ஒரு பண்புத்தரமான மதிப்பீட்டுச் செயன் முறையில் அடங்கக்கூடியது. எனவே, இதற்கென ஒரு தனித்துவமான மதிப்பீட்டு செயன்முறை உருவாக்கப்பட வேண்டும். இது பற்றி ”மதிப்பீடு ” எனும் அத்தியாயத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

### 4. சமூகத்தில் சமூக - மனவெழுச்சிக் கற்றல் பற்றிய பரந்த கலந்துரையாடல்கள் இல்லாமை.

பிள்ளைகளிடம் சமூக- மனவெழுச்சிக் கற்றலை உருவாக்குவதானது பாடசாலைகள், வகுப்பறை, வீடு ஆகிய அனைத்து பகுதியினராலும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய ஒரு பணியாகும். எனவே சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் சமூக மனவெழுச்சித் திறன்கள் என்றால் என்ன? நாம் அதனை ஏன் வளர்த்துக் கொள்ள வேண்டும்? இது எமது இன்றைய சமூகத்தின் பாதகமான நிலைமைகளுக்குச் செல்வாக்குச் செலுத்தியுள்ளதா? அவ்வாறாயின் நாம் இனி என்ன செய்ய

வேண்டும்? நாட்டுப் பிரசையாகவும் பிள்ளைகளாகவும் இருக்கும் எமது பொறுப்பு என்னவாக இருக்க வேண்டும்? போன்றவை தொடர்பான கலந்துரையாடல்கள் வாதப் பிரதிவாதங்கள் என்பவற்றுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இதற்காக அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், சமூக ஊடகங்கள் என அனைத்தும் ஒன்றிணைய வேண்டும். அனைவரும் ஒரே பாதையில் பயணிக்க வேண்டும். தற்போதைய சமூக நிகழ்வுகளின் மூலம் சமூகத்தைப் பற்றிக் குரல் எழுப்புபவர்கள் அனைவரும் எதிர்பார்ப்பது யாதெனில் சமூக மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்து கொண்ட மக்களைத் தான் என்பதை எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. எனவே, இதனைக் கொண்டு சமூகத்தில் பரந்துபட்ட கலந்துரையாடலை கட்டியெழுப்ப அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டும்.

# 09

# சமூக மனவெழுச்சிக் கற்றல் மதிப்பீட்டுச் செயன்முறைகள்

# Assessment of Socio Emotional Learning



சமூக மனவெழுச்சிக் கற்றல் மூலம் மாணவர்களின் அடைவுமட்டம் நடத்தை மற்றும் பாடசாலைக் கலாசாரம், செயல்திறன் போன்றவை. விருத்தியடைந்து வருகிறது. அனைத்து மாணவர்களின் சமூக மனவெழுச்சித் திறன்கள் வளர்ச்சிக்கான மனவெழுச்சிக் கற்றல் செயல்முறை (Process) மற்றும் பெறுபேறு (Outcomes) ஆகிய இரண்டையும் மதிப்பீடு செய்தல் மிக முக்கியமானது.

சமூக மனவெழுச்சிக் கற்றலை மதிப்பிடுவதற்கான முதன்மைக் காரணங்களாகக் கருதப்படுவது பின்வரும் இரு விடயங்களாகும்.

1. மாணவர்களிடம் சமூக மனவெழுச்சித் திறன்கள் விருத்தியடைதலும் வளர்ச்சியை இனங்கண்டறிதலும்.

2. சமூக மனவெழுச்சித் திறன்கள் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் வேலைத் திட்டங்கள்.

அதன்படி, மதிப்பீட்டுச் செயற்பாடுகள் இரண்டு காணப்படுகின்றன.

### செயன்முறை (Process)

உளவியல் கற்றல் தொடர்பான பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் மற்றும் பயிற்சிக் கணிப்பீடுகளின் மூலம் அங்கு நிகழ்வது யாதென்பதை அல்லது அங்கு என்ன நடக்கிறது என்பதை புரிந்து கொள்ள மற்றும் இனங்கண்டறிய உதவுகிறது.

### பேறு (Outcomes)

கணிப்பீட்டுச் செயற்பாட்டில் எதிர்பார்த்த நோக்கத்தைக் கவனத்திற் கொள்வதற்கு பேறு துணை செய்கிறது. இங்கு, சுய அறிக்கைகள், ஆசிரியர் அறிக்கைகள், செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் கண்டறிதல் தொடர்பான பதிவுகள்

பரிசீலிக்கப்பட வேண்டும். மேலும், மாணவர்களுடன் தொடர்புடைய தற்போது பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அறிக்கைகள் மற்றும் தரவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த கணிப்பீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

இங்கு மாணவர்களின் சமூக மனவெழுச்சித் திறன்களின் விருத்தி தொடர்பான தேர்ச்சிகளின் கணிப்பீட்டிற்காகப் பயன்படுத்த முடியுமான மாதிரி கணிப்பீட்டுப் படிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.அதனை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் மாணவர்களின் நடத்தைகளை அவதானித்து தவணைக்கு ஒரு தடவை பிள்ளைகளை கணிப்பீட்டிற்கு உட்படுத்துவதன் மூலம் சமூக மனவெழுச்சித் திறன்கள் விருத்தி தொடர்பான முடிவுகளைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப முதன்மைப் பருவம் வயது (5-6)<br><br>5 - 6 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் அதிக சுய கட்டுப்பாடுத் திறனைக் காட்டுவார்கள். உதாரணமாக, இப்பருவத்தைச் சேர்ந்த அநேகமாக பிள்ளைகளுக்கு பாடசாலையினுள் அமர்ந்த நிலையில் ஆலோசனைகளைப் பின்பற்ற ஆரம்பிக்கப்படுவது இத்தகைய பருவத்திலாகும். ஆனால் அவர்களது விருப்பப்படி ஏதாவது நடைபெறாத போது அவர்களிடத்தே திடீ-ரென ஒரு வித அமை-தியற்ற மனவெழுச்சித் தன்மை தோன்றுவதைக் காணலாம். | சுய முகாமைத்துவம் | • உணர்ச்சிகளை விவரிக்க வார்த்தைகளைப் பயன்படுத்துவார்.<br>• ஏதாவது ஒரு செயலை செய்வதற்கு முன் மீண்டும் சிந்திக்கும் ஆற்றலைப் பெறுவார்கள்.<br>• தனது தவணை வரும் வரை பொறுமையாக இருப்பார்கள். | | | |
| | சுய விழிப்புணர்வு | • தனக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்-தியாசத்தை இனங்காண்பார்.<br>• பாலின வேறுபாடுகளை அறிந்து அதற்கேற்ப செயற்படுவார்.<br>• அசௌகரியத்திற்கு உட்படுதல் என்றால் என்ன என்பதை அறிந்துக் கொள்வார். | | | |
| | சமூக விழிப்புணர்வு | • இரங்கலை உணர்வுபூர்வமாகத் தெரிவிப்பார்.<br>• சமூகச்சவால்கள் தொடர்பாகத் தான் பெற்ற விளக்கத்தை வெளிக்காட்டுவார் உதாரணமாக (வறுமை) | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| | பொறுப்பு வாய்ந்த தீர்மானம் மேற் கொள்ளல் | • இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தெரிவுகளில் விருப்புக்குரிய தெரிவை மேற்கொள்வார்.<br>• தனது செயற்பாடுகளின் விளைவுகளைப் புரிந்து கொண்டு அது தொடர்பாக கருத்துத் தெரிவிப்பார். | | | |
| | இடைத்தொடர்பு | • பிறரின் ஆலோசனைகளைப் பின்பற்றுவார்.<br>• நண்பர்களுடன் மகிழ்ச்சியாகக் காரியமாற்றுவார்.<br>• நண்பர்களின் நடத்தைகளைப் பின்பற்றுவார்.<br>• பிறரை மதிப்பளித்து விளையாட்டில் ஈடுபடுவார்.<br>• நண்பர்களுடன் ஏற்படும் முரண்பாடுகளுக்குத் தீர்வை வழங்கி காரியமாற்றுவார்.<br>• தனது நண்பர்களுடன் உலாவித் திரிய விருப்பு காட்டுவார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் முதன்மைப் பருவம். வயது (7-8)<br><br>7,8 வயது பிள்ளைகளை நண்பர்களாக ஆக்கிக் கொள்வதற்கு விருப்பம் காட்டுவதோடு அவர்கள் தமது நண்பர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதைக் காணக்கூடியதாகவும் இருக்கும்.<br><br>இப்பருவத்தைச் சேர்ந்த பிள்ளைகள் சுயமாகத் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ள முயல்வார்கள். என்றாலும் சிலசந்தர்ப்பங்களில் அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மூத்தோர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வார்கள். | சுய முகாமைத்துவம் | • தனது உணர்வுகளை வார்த்தைகளில் வெளிப்படுத்துவார்.<br>• சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உணர்வுகளை வெளிப்படுத்துவார்.<br>• அதிருப்தி ஏற்படும் போது அதை வெற்றிகரமாகச் சமாளிக்கும் திறனை வெளிக்காட்டுவார்.<br>• மாறிவரும் நிலைமைகளுக்கு ஏற்ப வெற்றிகரமாக இயல்படைவார். | | | |
| | சுய விழிப்பு-ணர்வு | • தனது தேவைகளை இனங்காண்பார்.<br>• தன்னைப் பற்றியும் , தன் திறமைகளைப் பற்றி சிந்தித்து அது தொடர்பாகத் தனது உணர்வைத் தெரிவிப்பார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| | சமுக விழிப்புணர்வு | • சுயவிமர்சன இயல்பை வெளிக்காட்டுவார்.<br>• வெளிப்புற மற்றும் நடத்தைசார் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு தன்னை விபரிப்பார்.<br>• (உதாரணமாக- என்னிடம் ஒரு நாய் உள்ளது, என்னால் நீந்த முடியும்)<br>• புறவய கருத்துக்களுக்கு ஆர்வம் காட்டுவார்.<br>• சமுதாய முரண்பாடுகளை அனுபவிக்கும் மக்கள் மீது பரிதாபம் காட்டுவார்<br>• தனது பாதுகாப்பு தொடர்பாக மூத்தோரை நம்பியிருப்பார். | | | |
| | பொறுப்பு வாய்ந்த தீர்மானம் மேற்கொள்ளல் | • ஒன்றுடனொன்று வேறுபட்ட மாற்று வழிமுறைகளின் நன்மைத் தீமைகள் பற்றிய கருத்தை முன்வைப்பார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| | இடைத்தொடர்பு | • தான் மேற்கொள்ளும் காரியங்களுக்கான விளைவுகளைத் தெரிவிப்பார்.<br>• சம வயது குழுக்களுடன் கருத்துக்களைப் பகிர்ந்துக் கொள்வார்.<br>• நண்பர்களுடன் ஏற்படும் மோதல்களைத் தீர்த்துக் கொள்வார்.<br>• போட்டித் தன்மைமிக்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• எதிர் பாலினத்தவர்களுடன் நட்பை வளர்த்துக் கொள்வார்.<br>• தனது நண்பர்களைப் பின்பற்றி ஒழுகுவார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் முதன்மை நிலை (வயது 9-10)<br><br>பிள்ளைகள் வயது 9 மற்றும் 10 வயதில் அதிகம் முதிர்ச்சியடைந்த மனவெழுச்சி நிலைக்கு ஆளாகுவார்கள். | சுய முகாமைத்துவம் | • தனது உணர்வுகளை பொருத்தமான முறையில் வெளிப்படுத்துவார்.<br>• அநேகமாக தனது கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வார்.<br>• தனக்காகத் தானே முன்தோன்றுவார்.<br>• சிறந்த விளையாட்டுத் திறனைக் கொண்டுள்ளார் என்பதை வெளிக்காட்டுவார். | | | |
| ஏமாற்றங்கள் மற்றும் மோதல்கள் ஏற்படும் போது தாங்களாகவே அதனைத் தீர்த்துக் கொள்ளும் ஆற்றலைப் பெறுவார்கள். | சுய விழிப்புணர்வு | • விருப்பு மற்றும் வெறுப்புக்களை ஆராய்வார்.<br>• நீதிக்காக உணர்வுத் தன்மையுடன் செயற்படுவார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| | சமுக விழிப்புணர்வு | ● மற்றவர்களின் உணர்வுகளைத் தான் அறிந்துக் கொண்டு ஆழ்ந்ததன்மையுடன் செயற்படுவார்.<br>● தற்போதைய நிகழ்நிலைமைகளில் ஆர்வம் காட்டுவார்.<br>● சமூகப் பிரச்சினைகளில் ஆர்வம் கொள்வார்.<br>(உதாரணம்- வறுமை.·. ஏழ்மை, வீடற்றநிலை, வேலையின்மை, பொருளாதாரப் பிரச்சனைகள்) | | | |
| | பொறுப்பு வாய்ந்த தீர்மானம் மேற்கொள்ளல் | ● பிரச்சினைகளுக்காக மிகச்சிறந்த தீர்வைத் தேர்ந்தெடுப்பார்.<br>● தனதுதீர்மானங்கள் சரியாக செயற்படுத்தப் படுகின்றனவா என்பதை அறிந்துக் கொள்வார். தேடிப் பார்ப்பார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| | இடைத்தொடர்பு | • சமவயதுக் குழுக்களினால் ஏற்படும் அழுத்தங்களுக்கு எதிராக மிகச்சரியான முறையில் பதிலளிப்பார்.<br>• நண்பர்களின் உதவியை நாடுவார்.<br>• சில நெருங்கிய நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடுவார்.<br>• நண்பர்களுடன் அடிக்கடி கலந்துரையாடுவார்.<br>• பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக மகிழ்வுடன் செயற்படுவார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| தரம் 6-8(11-13)<br><br>வயது 11 முதல் 13 வயது வரையிலான குழந்தைகள் பருவமடைவதற்கு வழிவகுக்கும் சமூக மற்றும் மனவெழுச்சி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கமாற்றங்கள் இக்காலப் பகுதியில் நிகழ்கின்றன என்பதை நாம் அறிவோம். எனவே இந்த வயதிற்குட்பட்ட பிள்ளைகள் தங்கள் சுயாதீனத்தை வலியுறுத்துவதற்கான வாய்ப்புக்களை அதிகமாக வெளிக்காட்டுவார்கள். | சுய முகாமைத்துவம் | • தனது காரியங்களுக்குத் தானே பொறுப்பு கூறுவார்.<br>• (உதாரணம் - வழங்கப்படும் வீட்டுப் பாடத்தைச் செய்வார்.<br>• பயம் மற்றும் நிராகரிப்பு போன்ற உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வார். | | | |
| | சுயவிழிப்புணர்வு | • தனிப்பட்ட இலக்குகளை உருவாக்கிக் கொள்வார்.<br>• மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது தொடர்பாக உணர்வு பூர்வமாகச் செயற்படுவார்<br>• தன்னைப் பற்றி ஏற்படுகின்ற உணர்வுகளுடன் போராடிப் பொருத்தமான முறையில் செயற்படுவார்.<br>• தனிப்பட்ட பெறுமானங்கள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாக ஆராய்வு செய்வார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| | சமுகவிழிப்புணர்வு | • கலாசாரம், சுற்றுச்சூழல், இசை, நண்பர்கள், ஆடை போன்ற எண்ணக்கருக்கள் மூலம் தன்னை வரை விலக்கணப்படுத்திக் கொள்வார். | | | |
| | பொறுப்பு வாய்ந்ததீர்மானம் மேற்கொள்ளல் | • மற்றவர்களின் புலக்கோணத்தை ஏற்றுக்கொண்டு மதிப்பளிப்பார்.<br>• தேவையான சந்தர்ப்பங்களின் போது உதவியை நாடுவார். | | | |
| | இடைத்தொடர்பு | • தனது செயல்களுக்கு பிரதிவிளைவுகள் உள்ளன என்பதை விளங்கிக் கொள்வார்.<br>• நண்பர்களின் கருத்துக்களுக்கு மதி-ப்பளித்து விளக்கமளிப்பார்.<br>• நண்பர்களுடன் நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்வார்.<br>• சமவயதுக் குழுக்களுடன் விவாதித்துப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வார்.<br>• நண்பர்களிடம் ஆலோசனைகனை எதிர்பார்ப்பார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| தரம் 9-11<br>(14-16 வயது)<br><br>14 முதல் 16 வயதுக்குள் பிள்ளைகள் பொதுவாக மிகவும் ஆழமான மனவெழுச்சி முதிர்வைக் காட்டத் தொடங்குவார்கள் என்பதோடு தங்கள் குடும்பத்தினருடன் நேரத்தை செலவழிப்பதை விட அவர்களின் சமூக வாழ்க்கையைப் பற்றி அதிகமாகக் கவனத்திற் கொள்வார்கள். | சுய முகாமைத்துவம் | • தனது தேவைகளைத் தானே பார்த்துக் கொள்வார்.<br>• ஒழுங்கமைப்புத் திறன்களை விருத்தி செய்துக் கொள்வார்.<br>• தனது உணர்வுகளை வார்த்தைகளில் மிகச்சிறப்பாக வெளிப்படுத்துவார். | | | |
| | சுய விழிப்புணர்வு | • சுய பெறுமானத்தையும் ஒழுக்கப் பண்புகளையும் வெளிக்காட்டுவார்.<br>• தன்னை மற்றவர்களுடன் ஒப்பிட்டுக் கொள்வார்.<br>• தனது புறத்தோற்றம் தொடர்பாக அதிக கவனஞ் செலுத்துவார்.<br>• மிகவும் விழிப்புணர்வுடன் செயற்படுவார்.<br>• தன்னைப் பற்றி ஆய்ந்தறிவார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| | சமுகவிழிப்புணர்வு | • குடும்பப் பெறுமானங்கள் மற்றும் அதிகாரத்தன்மை தொடர்பாக வினாவெழுப்புவார்.<br>• நீதியும் சமத்துவமும் மிக முக்கிய எண்ணக்-கருக்களாகும் என கருத்து முன்வைப்பார்.<br>• தனது சமுகம் மற்றும் வெளியுலகத்தவர்கள் தொடர்பாக ஆராய்வு செய்வார். | | | |
| | பொறுப்பு வாய்ந்ததீர்மானம் மேற்கொள்ளல் | • சரியானவைக்கும் தவறானவைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைத் தெரிவிப்பார்.<br>• பிரச்சினைகளுக்கு அனுமான முறையிலான தீர்வுகளை முன்வைப்பார்.<br>• நட்புறவை ஏற்படுத்திக் கொள்வது மிக முக்கியமானதாகக் கருதுவார்.<br>• (உதாரணமாக பிரபல்யம் அடைய வெகுவாக விரும்புதல்.) | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| | இடைத்தொடர்பு | • ஒரு சிறந்த நண்பரைப் பெறுவதற்கு மிகவும் விருப்புக் காட்டுவார்.<br>• சமவயதுக் குழுக்களுடன் நேர்மையாகச் செயற்படுவார்.<br>• சமவயது நண்பர்களிடம் கௌரவத்தையும் நேர்மையையும் வேண்டுவார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| தரம் 12-13<br><br>(வயது 16-18)<br><br>16 முதல் 18 வயதுப் பிள்ளைகள் பொதுவாக சுய கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளார்கள்.<br>அவர்கள் தனது நண்பர்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் தன்னுடையதாகவே இருக்க விருப்பம் கொள்வார்கள். | சுய முகாமைத்துவம் | • நிலையான மனவெழுச்சித் திறனை சிறப்பாக வெளிக்காட்டுவார்.<br>• அதீத சுயாதீனத்தை வெளிக்காட்டுவார்.<br>• தமது செயல்களுக்கு பொறுப்புக் கூறுவார். | | | |
| | சுய விழிப்புணர்வு | • தமது பலம் மற்றும் பலவீனங்கள் பற்றி சுய விழிப்புணர்வுடன் செயலாற்றுவார்.<br>• புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக விருப்பம் காட்டுவார்.<br>• தன்னம்பிக்கையை மிகத் தெளிவாக வெளிக்காட்டுவார். | | | |
| | சமூக விழிப்புணர்வு | • மற்றவர்களின் உணர்வுகளுக்கு ஆழமான இரங்கலை வெளிப்படுத்துவார்.<br>• தனது குடும்பத்திலிருந்து மனவெழுச்சிசார் உணர்வு ரீதியாக விலகி இருப்பதைக் காட்டுவார்.<br>• மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார்.<br>• அரசியல் மற்றும் சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக மிகவும் ஆர்வத்துடன் செயற்படுவார். | | | |

| மாணவப் பருவம் | திறன் | தேர்ச்சி | மிகவும் நன்று ✓ | நன்று ✓ | விருத்தியடைய வேண்டும். ✓ |
|---|---|---|---|---|---|
| | பொறுப்பு வாய்ந்த தீர்மானம் மேற்கொள்ளல | • காரண காரியங்களின் அடிப்படையில் மிகவும் பயனுள்ள வகையில் அனுமானம் செய்வார்.<br>• தனது செயற்பாடுகள் எதிர்காலத்தில் பாதகமாக அமையும் என்பதை விளங்கிக் கொள்வார். | | | |
| | இடைத்தொடர்பு | • எதிர் பாலினத்தவர்கள் மீது மிக ஆர்வம் காட்டுவார்.<br>• பாதுகாப்பு மற்றும் பகிர்ந்துக் கொள்ளல் தொடர்பான எண்ணக்கருக்கள் மீது ஆழமாக துலங்கல் காட்டுவார்.<br>• மிக நெருக்கமாக மற்றும் அன்பு கொள்ளல் தொடர்பான உணர்வுகளை மிக மேலாக வெளிக்காட்டுவார். | | | |

## References

1. Danner.D ,Lechner,C.M. ,Spengler.M.,(2021) Editional:Do We Need Socio – Emotional Skills? Front Psychol .12:723470. doi:10.3389/Fpsy g.2021.723470

2. Durlak, J. A., Weissberg, R. P., Dymnicki, A. B., Taylor, R. D. &Schellinger, K. B. (2011). The impact of enhancing students' social and emotional learning: A meta-analysis of school- based universal interventions. Child Development, 82, 474-50.

3. Dusenbury, L., Calin, S., Domitrovich, C., &Weissberg, R. P. (2015). What Does Evidence-Based Instruction in Social and Emotional Learning Actually Look Like in Practice? A Brief on Findings from CASEL's Program Reviews. Collaborative for Academic, Social, and Emotional Learning.

4. Greenberg, M., Wissberg, R, O'Brien, M.U., Zins,J., Fredricks,L., Resnik, H.,et al.(2003). Enhancing school-based prevention and youth development through coordinated social, emotional, and academic learning. American Psychologist,58

5. Kimberly, A., Schonert-Reichl, J.L., Hanson,P.,& Shelly, H.,(2015), SEL and perservice teacher education, Durlak_Hbk-SocialAndEmotlLearning.indb

6. Laburova, O. "Teaching communication at lessons of English through building sel (social and emotional learning) skills." Professionalism of the Teacher: Theoretical and Methodological Aspects 12 (2020): 273-283

7. https://casel.org/fundamentals-of-sel/what-is-the-casel-framework/#responsible

8. https://www.oecd.org/education/school/UPDATED%20Social%20and%20Emotional%20Skills%20-%20Well-being,%20connectedness%20and%20success.pdf%20(website).pdf